பக்கங்கள்:-பத்து

Registered as a News paper in Sri Lanka

விலை ரூபா. 6.00

ராம்கோ சீமெந்து
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
ஆசியாக் கண்டத்தில்
முதலாம் தரத் தொழிற்சாலையில்
இருந்து தயாரிக்கப்பட்டது.

வலம்புரி

Valampuri

சங்கு 04 | வள்ளுவர் ஆண்டு 2034 | கார்த்திகை 16 | செவ்வாய்க்கிழமை | (02.12.2003) | தொலைபேசி - 2223378 | ஒலி 348

# இலங்கையில் தேர்தல் வருவதை

# இந்திய அரசு விரும்பவில்லை

## அமைச்சர் ஹக்கீம் பி.பி.ஸிக்குப் பேட்டி

(நமது நிருபர்)

**தென்னிலங்கையில் தற்போது ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடியை நீடிக்கவிடாது ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவும் இணக்கப்பாடு ஒன்றுக்கு வந்து சமாதானப் பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிக்க வேண்டுமென இந்தியா விரும்புவதாக வெளியுறவு அமைச்சர் ஜஸ்வந்சிங்ஹா தன்னிடம் தெரிவித்துள்ளதாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் நேற்றிரவு பி.பி.ஸிக்கு அளித்த பேட்டியில் கூறியுள்ளார்.**

இந்தியா சென்றுள்ள அமைச்சர் ரவூப் ஹக்கீம் இந்திய வெளியுறவு அமைச்சர் ஜஸ்வந்சிங்ஹாவை சந்தித்த பின்னர் பி.பி.ஸிக்கு அளித்த பேட்டியில் மேலும் தெரிவித்திருப்பதாவது,

ஜனாதிபதியும் பிரதமரும் இணைந்து செயற்படத் தவறும் பட்சத்தில் தேர்தல் ஒன்று வருமாக இருந்தால் நிலைமை சீராகிவிடுமென்றோ, அல்லது நிலைமை சாதகமாகி வருமென்றோ இந்தியா ஒரு போதும்

(10ம் பக்கம் பார்க்க)

## முஸ்லிம் காங்கிரஸ் ஆதரவாளர் ஏறாவூரில் சுட்டுக் கொலை

(மட்டக்களப்பு)

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆதரவாளர் ஒருவர் நேற்றிரவு 10 மணியளவில் இனந்தெரியாதோரால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

மட்டக்களப்பு ஏறாவூரில் இடம் பெற்ற இச் சம்பவத்தில் ஏறாவூர் மாவட்ட வைத்தியசாலை அம்புலன்ஸ் கிளினரான முகமட் பாறுக் (வயது35) என்பவரே சுட்டுக் கொல்லப்பட்டவராவார்.

வைததியசாலையில் கடமையில் இருந்த பிரஸ்தாப நபர் தனிப்பட்ட அலுவலாக வைத்தியசாலைக்கு வெளியே நடமாடிய சமயம் இக் கொலைச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

ஏறாவூரில் பெரும் பரபரப்பையும் பதற்றத்தையும் ஏற்படுத்தியுள்ள இச் சம்பவம் குறித்து பொலிஸாரால் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இக் கொலைச் சம்பவம் அரசியல் பின்னணியில் இடம் பெற்றதா, அல்லது ஆயுதக் குழுக்களின் கைவரிசையா என்பது குறித்து பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

(இ)

## நல்லிணக்கக் குழு நேற்றுக் கூடியது முடிவுகள் எதுவும் எட்டப்படவில்லை

(கொழும்பு)

அரசியல் நெருக்கடிக்குத் தீர்வு காணும் வகையில் ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் இடையில் இணக்கப்பாட்டை ஏற்படுத்த அமைக்கப்பட்ட நான்கு பேர் கொண்ட நல்லிணக்கக் குழு நேற்றுக் கூடியது.

ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் மனோதிஸ்ஸவெல, ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளர் மலிக் சமரவிக்கிரம, பிரதமரின் செயலாளர் பிரட்மன் வீரக்கோன், ஜனாதிபதியின் செயலாளர் ஆகியோர் நேற்று அலரிமாளிகையில் கூடி ஆராய்ந்தனர்.

இச் சந்திப்பில் இணக்கப்பாடு எதுவும் எட்டப்படாத நிலையில், அதிருப்தி நிலவும் விடயங்களை ஆராய்ந்து இணக்கம் காணும் முகமாக மீண்டும் கூடி ஆராய்வதற்குத் தீர்மானிக்கப்பட்டது. நேற்றைய சந்திப்புத் தொடர்பாக பிரதமரினதும் ஜனாதிபதியினதும் செயலாளர்கள் கையொப்பமிட்டு கூட்டு அறிக்கை ஒன்றை வெளியிட்டனர்.

(த)

## கிண்ணியா சம்பவங்களுக்கும் புலிகளுக்கும் தொடர்பில்லை!

### நேற்றைய கூட்டத்தில் புலிகளின் பிரதிநிதிகள் தெரிவிப்பு

(கொழும்பு)

திருகோணமலை கிண்ணியாப் பிரதேசத்தில் உள்ள அரசடியில் வைத்து முகமட் ராபிக் சஞ்சுன் என்ற முஸ்லிம் இளைஞர் இனந்தெரியாதோரால் தாக்கப்பட்ட சம்பவத்தையடுத்து எழுந்துள்ள பதற்ற நிலையைத் தணிப்பதற்கு நேற்று திருகோணமலையில் இரண்டு கூட்டங்கள் இடம் பெற்றுள்ளன.

திருகோணமலைப் பொலிஸ் தலைமையகத்திலும், திருகோணமலை யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழு அலுவலகத்திலும் இக் கூட்டங்கள் நடைபெற்றன.

திருகோணமலைப் பொலிஸ் தலைமையகத்தில் நேற்றுக் காலை நடைபெற்ற கூட்டத்திற்கு சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் உபாலி

(10ம் பக்கம் பார்க்க)

### யாழ்.பல்கலை பதிவாளர் அலுவலகம்

## கலைப்பீட மாணவர்களால் நேற்று பூட்டப்பட்டது

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக் கழக பதிவாளர்அலுவலகம் கலைப் பீட மாணவர்களால் நேற்றுப் பூட்டப்பட்டது. இதனால் பதிவாளர் அலுவலகச் செயற்பாடுகள் முற்றாகச் ஸ்தம்பித்தன.

கடந்த ஓகஸ்ட் மாதம் கலைப்பீட மாணவர்கள் ஒன்றியத்துக்குரிய டெக் ஒன்று திருடப்பட்ட சம்பவத்திற்கு இதுவரை உரிய நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்படாமைக்கு அதிருப்தி தெரிவிக்கும் வகையிலேயே பதிவாளர் அலுவலகம் பூட்டப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (இ)

## தன்னாட்சி அதிகார சபையை ஜனாதிபதி ஏற்றால் கூட்டு இல்லை

### ஜே.வி.பி. அறிவிப்பு

(கொழும்பு)

தன்னாட்சி அதிகார சபையை உருவாக்கும் விடுதலைப் புலிகளின் பிரேரணைகளை பேச்சுக்கு அடிப்படையாகக் கொள்வதென்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா தீர்மானித்திருப்பாராயின் சுதந்திரக் கட்சியுடன் உடன்படிக்கை ஒன்று ஏற்படுத்திக் கொள்ளப்பட மாட்டாது இவ்வாறு கடந்த வெள்ளியன்று ஜே.வி.பி.முடிவு செய்துள்ளது.

இத்திட்ட வரைபு பேச்சுக்களுக்கு அடிப்படையாகக் கொள்வதற்கு பொருத்தமானதாக அமையமாட்டாதென ஜே.வி.பியின் பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ச தெரிவித்தார். அண்மையில் ஜனாதிபதி ஐரோப்பிய வெளிவிவகார ஆணையாளர் கிறிஸ்பற்றனுடனான சந்திப்பின் போதும் புரோன்றலைன் சஞ்சிகைக்கு வழங்கிய பேட்டியின் போதும் தன்னாட்சி அதிகார சபை யோசனைகள் எதிர்காலப் பேச்சுகளுக்கு அடித்தளமாக அமையும் எனத் தெரிவித்திருந்தார்.

ஒரு ஜனாதிபதியாக அவர் தெரிவித்துள்ள கருத்துக்கும் சுதந்திரக் கட்சியின் தலைவியாக அவர் தெரிவித்த கருத்துக்குமிடையில் முன்னுக்குப்பின் முரண்பாடு கள் உள்ளன. இந் நிலையில் சுதந்திரக் கட்சியால் எடுக்கப்பட்டதும்

(10ம் பக்கம் பார்க்க)

## ஐஸ்கிறீம் வான் மோதியதில் குடும்பஸ்தர் ஸ்தலத்தில் பலி

### நீர்வேலி கரந்தன் பகுதியில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் இராஜவீதி, கிருஷ்ணன் கோயில் சந்திக்கும், கரந்தன் சந்திக்கும் இடையில் இடம்பெற்ற விபத்துச் சம்பவமொன்றில், குடும்பஸ்தர் ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

நேற்று மாலை 7 மணியளவில் இடம் பெற்ற இவ்விபத்தில் பருத்தித்துறை வீதி கோப்பாய் தெற்கு பரமேஸ்வரி அம்பாள் ஒழுங்கையைச் சேர்ந்த இளையப்பு கோபாலசிங்கம்(வயது 56) என்ற குடும்பஸ்தரே பரிதாபகரமாக உயிரிழந்தவராவார்.

பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தில் பணியாற்றும் பிரஸ்தாப நபர், நேற்று மாலை சங்கத்தின் ஊரெழுக் கிளை

(10ம் பக்கம் பார்க்க)



நீர்வேலி கரந்தன் பகுதியில் நேற்று மாலை இடம் பெற்ற விபத்தில் பலியான நபர் இரத்த வெள்ளத்தில் கிடப்பதையும் அவர் சென்ற துவிச்சக்கரவண்டி சேதமுற்றுக் கிடப்பதையும் படங்களில் காணலாம். (படம்: சதீஸ்)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## வெளிநாட்டுக் கப்பல்களில் பணியாற்ற இலங்கை மாலுமிகளுக்கு வாய்ப்பு

(கொழும்பு)

வெளிநாட்டுக் கப்பல்களில் சேவையாற்றும் வாய்ப்பு இலங்கை மாலுமிகளுக்கு கிடைக்கவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

17 நாடுகளுடன் துறைமுக அபிவிருத்திக் கப்பல் போக்குவரத்து அமைச்சு செய்துகொண்டுள்ள புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் அடிப்படையில் இது சாத்தியமாகியுள்ளது.

7 ஆயிரம் வர்த்தகக்கப்பல்களைப் பதிவு செய்துள்ள பனாமா, 6 ஆயிரம் கப்பல்களைப் பதிவு செய்துள்ள லைபீரியா ஆகியனவும் இந்தப் 17 நாடுகளில் அடங்கும்.

இதேவிதமான புரிந்துணர்வு ஒப்பந்தங்களை பிரிட்டன், இந்தியா அவுஸ்ரேலியா, ஈரான், நோர்வே, பெல்ஜியம், குவைற் ஆகிய நாடுகளுடன் எதிர்காலத்தில் செய்வதற்கு துறைமுக அபிவிருத்தி கப்பல் போக்குவரத்து அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது. (தி-60.10)



## பெண்கள் மீதான வன்முறைகளை கண்டித்து விழிப்புணர்வு நடவடிக்கை

### குடாநாடு தழுவிய ரீதியில் முன்னெடுக்கப்படவுள்ளன

(யாழ்ப்பாணம்)

பெண்களுக்கெதிரான வன்முறைகளை கண்டித்து அவற்றை நிறுத்தும் முகமாக பொதுமக்களிடையே விழிப்புணர்வைச் ஏற்படுத்தும் வகையில் குடாநாடு தழுவிய ரீதியில் நாளை புதன்கிழமை விழிப புணர்வுச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

ஐக்கிய நாடுகள் அமைப்புகள், அரசசார்பற்ற அமைப்புக்கள் மற்றும் சர்வதேச நிறுவனங்கள் ஆகியவற்றின் உறுப்பினர்களை உள்ளடக்கி அமைக்கப்பட்டுள்ள செயற்பாட்டுக்குழுவின் ஏற்பாட்டில் இவ் விழிப்புணர்வுச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

அன்றைய தினம் யாழ்.போதனா வைத்தியசாலை, யாழ். பிரதான பேருந்து தரிப்பிடம், பொலிஸ் நிலையம் ஆகியன உட்பட மற்றும பொது இடங்களிலும் பெண்களுக்கு எதிரான வன்முறைகளை நிறுத்துக எனும் வாசகத்திலான வெள்ளைப் பட்டிகள் பொதுமக்களுக்கு வழங்கப்படவுள்ளன.

இம்மாதம் 25ஆம் திகதிமுதல் 2 வாரங்களை 'பால் மற்றும் பால்நிலை சார்ந்த வன்முறைகளுக்கு எதிரான வாரம்' ஆக இச் செயற்பாட்டுக்குழு பிரகடனப்படுத்தி விழிப்புணர்வுச் செயற்பாடுகள் யாழ் குடாநாடு தழுவிய ரீதியில் முன்னெடுக்கப்படவுள்ளது.

இதன் முதற் கட்ட நடவடிககை யாகவே நாளைய தினம் இவ் விழிப்புணர்வுப் பட்டிகள் வழங்கப்படவுள்ளன. (ந-18)

## திலங்க சுமதிபால இவ்வாரம் நீதிமன்றில் ஆஜராவார்

(கொழும்பு)

இலங்கை கிரிகெற்கட்டுப்பாட்டுச்சபைத் தலைவர் திலங்க சுமதிபால இவ்வார இறுதிக்குள் தனது விசாரணைகளுக்காக நீதிமன்றில் ஆஜராவதாக அறிவித்துள்ளார்.

இலங்கை கிரிக்கற் கட்டுப்பாட்டுச்சபைத் தலைவரும் ரெலி கொம் நிறுவனத் தலைவருமான திலங்க சுமதிபால கடந்த 1999ஆம் ஆண்டு இங்கிலாந்தில் நடைபெற்ற உலகக் கிண்ண கிரிக்கெற் போட்டிகளைப் பார்வையிடச் செல்லவதற்காக பாதாள உலகக் கோஷ்டியின் தலைவர் ஒருவரை இலங்கை கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் செலவில் அனுப்பி வைத்ததாக குற்றம் சாட்டப்பட்டுள்ளதைத் தொடர்ந்து, அவரை நீதிமன்றில் ஆஜர் செய்யுமாறு சட்டமா அதிபர் கமலசபேசன் கடந்த வியாழனன்று சி.ஐ.டி பொலிஸாருக்கு உத்தரவிட்டிருந்தமை தெரிந்ததே.

ஆயினும் திலங்க சுமதிபால தலைமறைவாக இருந்து வருவதாகவும் அவரை கைது செய்ய முடியாதிருப்பதாகவும் வெளிவந்த செய்திகளை அடுத்து அவர் இவ் அறிவுறுத்தலை விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் கருத்து தெரிவிக்கையில்,

தலைமறைவாக வாழ்ந்து வருவதாக ஊடகங்களில் வெளியான செய்திகளில் எதுவித உண்மையும் இல்லை. அத்துடன் என்னைக் கைதுசெய்யுமாறு எந்தவொரு நீதிமன்றமும் உத்தரவு பிறப்பிக்கவில்லை. சட்டமா அதிபரிடமிருந்து ஒரு கடிதம் மாத் திரமே சி.ஐ.டி பொலிஸாருக்கு வழங்கப்பட்டுள்ளது. இவர்களுக்கு ஏற்கனவே நான் இது விடயம் குறித்து வாக்குமூலம் அளித்து விட்டேன்.

மேலும் இவ்விடயம் குறித்து ஒதுங்கவோ அன்றி தப்பிக்கவோ நான் முயற்சி செய்யவில்லை எவ்வாறாயினும் இவ்வார இறுதிக்குள் இது விடயம் குறித்து நான் நீதிமன்றில் ஆஜராவதற்கு தயாராகவே இருக்கிறேன் எனக் குறிப்பிட்டுள்ளார். (தி-18)

## 'தலைவரின் இதயம்' வெளியீடு

(மட்டக்களப்பு)

தமிழீழத் தேசியத் தலைவர் வே.பிரபாகரன் இதுவரை ஆற்றிய மாவீரர் தின உரைகளின் தொகுப்பு நூல் இம்மாத நடுப்பகுதியில் வெளியிடப்படவுள்ளது.

விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினர்களில் ஒருவரான க.குலேந்திரன் தொகுத்த 'தலைவரின் இதயம்' எனும் மாவீரர் உரைத் தொகுப்பு நூல் வெளியீட்டு விழா இம்மாத நடுப்பகுதியில் மட்டக்களப்பு கரடியனாறு மகா வித்தியாலயத்தில் இடம் பெறவுள்ளது. (பி-18)

## கலைவிழா

(கொழும்புத்துறை)

தென்னிந்தியத் திருச்சபையின் இலவச் தொழிற் பயிற்சி நிறுவனத்தின் அனைத்துக் கிளைகளினதும் வருடாந்தக் கலைவிழா நாளை புதன்கிழமை உடுவில் பெண்கள் பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இக்கலைவிழாவில் ஒன்பது தொழிற்பயிற்சிக் கிளைகள் பங்குபற்றவுள்ளன. (ந-51)





விலை ரூபா. 14.00

சங்குநாதம்

சண்டையா? சமாதானமா? பிரபாவின் உரைக்கு என்ன பதில்? - விதுரன்

கிறிஸ்பற்றனின் இலங்கை விஜயம் - கோவையூர் ஜெயன்

நெஞ்சை நெகிழ வைத்த மாவீரர் நாள்- டொறிங்ரன்

ஆலடி மாநாடு

வியாசரின் பதில்கள்

பொன். கணேசமூர்த்தியின் கடிவாளம் இல்லாத கனவு. . . (நெடுங்கதை)

இன்னும் பற்பல அம்சங்களுடன்

வாசிக்கத் தவறாதீர்கள்
திங்கள் வைகறையில் உங்கள் உள்ளங்களில் ஒலிப்பது

சங்குநாதம்

# பாகிஸ்தான் வான் பரப்பில் பறக்க இந்திய விமானங்களுக்கு அனுமதி

(இஸ்லாமபாத்)

தனது வான் பரப்பில் இந்திய விமானங்கள் பறப்பதற்கு விதிக்கப்பட்ட தடையை நீக்க தயாராக இருபபதாக பாகிஸ்தான் அறிவித்துள்ளது.

இவ்விரு நாடுகளுக்குமிடையிலான விமான சேவையை ஆரம்பிப்பதன் மூலம் தடைப்பட்டுப் போயுள்ள சமாதானப் பேச்சுவார்த்தைகளை முன்னெடுப்பதற்கும் வழிவகுக்கும் என பாகிஸ்தான் கூறியுள்ளது.

இஸ்லாம பாத்தில் எதிர்வரும் ஜனவரி மாதம் நடைபெறவுள்ள சார்க் உச்சிமாநாட்டுக்கு முன்னோடியாகவே பாகிஸ்தான் இந்த யோசனையை தெரிவித்துள்ளது.

பாகிஸ்தான் ஜனாதிபதி பர்வேஷ் முஷாரப்பின் இந்தயோசனையை அடுத்து இருநாடுகளின் விமான நிலைய உயரதிகாரிகளும் பேச்சுக்களை நடத்தத் தயாராகவுள்ளனர்.

இப பேச்சுக்களின் போது பாகிஸ்தான் வான் பரப்பில் இந்திய விமானங்கள் பறப்பதற்கு அனுமதி வழங்கப்படும் எனவும், நல்லெண்ண நோக்குடனேயே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் முஷாரப் தெரிவித்துள்ளார்.



இதேவேளை, கடந்த செவ்வாய் கிழமை நள்ளிரவு முதல் காஷ்மீர் எல்லைப் பிரதேசத்தில் இரு நாடுகளும் யுத்தநிறுத்தத்தைக் கடைப்பிடித்து வருகின்றமை இங்கு குறிப்பிடத்தக் கது. (தி-2)



இந்திய ஐரோப்பிய யூனியன் உச்சி மாநாடு கடந்த சனிக்கிழமை புதுடில்லியில் ஆரம்பமானது. இம்மாநாட்டிற்கு வந்த இத்தாலிய வெளியுறவுத்துறை அமைச்சர் மார்க்கரிட்டா போனிவரை கைகுலுக்கி வரவேற்கும் இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜஸ்வந் சிங்ஹ.

## ஐவரிகோஸ்டில் தொடர்ந்தும் பிரான்ஸ் படையினர்

(அபிட்ஜான்)

ஐவரிக் கோஸ்டில் தமது அமைதி காக்கும் படையினர் தொடர்ந்தும் பணிகளை மேற்கொள்வார்களென பிரான்ஸ் இராணுவப் பேச்சாளர் லெப்ரினன் கேணல் ஜோர்ஜஸ் பிலோன் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகளினால் பணித்துரைக்கப்பட்டதன் பிரகாரம், தமது பணிகளை நிறைவேற்ற வேண்டியுள்ளதாகவும்.

அத்துடன், ஐவரிக் கோஸ்ட் இராணுவ வீரர்களது நிலைப்பாடு குறித்து எவ்வித கருத்துக்களையும் தெரிவிக்கப்போவதில்லையெனவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

பிரான்ஸ் நாட்டின் படைவீரர்கள் ஐவரிக் கோஸ்டில் இருந்து வெளியேற வேண்டுமெனக் கோரியுள்ள நிலையிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.



பாங்கொக்கின் லோப்புரி மாகாண ஆலயத்தில் ஆண்டுதோறும் குரங்குகளுக்கு நடத்தப்படும் மாபெரும் விருந்தில் உண்டு மகிழும் விருந்தாளி இந் நிகழ்வைக் காண ஆயிரக்கணக்கான சுற்றுலாப் பயணிகள் வருகைதந்தனர்.

# துருக்கிப் பொலிஸார் தலிபான்களால் விடுதலை

(கான்பரா)

ஆப்கானிஸ்தானில் வைத்து கடந்த மாதம் கடத்தப்பட்டதுருக்கியப் பொறியியலாளர் ரஷன் அனானை தலிபான் அமைப்பினர் நேற்று முன்தினம் விடுவித்துள்ளனர்.

மேற்படி பொறியியலாளரை அவரது நிறுவனத்தில் ஒப்படைத்துள்ளதாக கந்தகார் தலிபான் அலுவலகம் அறிவித்துள்ளது.

மேற்படி பொறியியலாளர் ஒரு முஸ்லிம் என்ற காரணத்தினாலேயே அவரை விடுதலை செய்வதாக தலிபான் அமைப்பு அறிவித்துள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. (தி-9)

# இந்தியாவும் இத்தாலியும் கூட்டு ஒப்பந்தம் கைச்சாத்து

(ரோம்)

இந்தியாவும் இத்தாலியும் இருதரப்பு உறவுகளை மேமபடுத்தும் ஒரு முயற்சியாக அறிவியல், மற்றும் தொழில நுட்பத்துறையில் கூட்டாகச் செயல்படுவதற்கான ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திட்டுள்ளன.

இந்த ஒப்பந்தத்தில் இத்தாலியின் வெளியுறவுத்துறை அமைச்சரும், இந்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்துறை இணையமைசசரும் கையெழுத்திட்டுள்ளனர்.

இதற்கமைய இருநாட்டு விஞ்ஞானிகளை பரஸ்பரம் பரிமாறிக் கொள்வதோடு, மருத்துவ அறிவியல், கணனி அறிவியல், மின்னனு தொழில் நுட்பம் போன்ற துறைகளிலும் ஆராய்ச்சித் திட்டங்களை பரிமாறிக் கொள்வதற்கு இந்த ஒப்பந்தம் உதவியாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (தி-9)

# பலஸ்தீன வேண்டுகோளை ஏற்க இஸ்ரேல் மறுப்பு

(ரெல்அவிவ்)

மத்திய கிழக்கில் சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்க வேண்டுமானால், மேற்குக்கரையில் பாதுகாப்பு சுவர்களை அமைப்பதை இஸ்ரேல் உடன் நிறுத்த வேண்டுமென பலஸ்தீனம் விடுத்த வேண்டுகோளை இஸ்ரேல் பிரதமர் ஏரியல் ஷெரோன் ஏற்க மறுத்துள்ளார்.

எவ்வாறாயினும், இஸ்ரேலுக்கும் பலஸ்தீனத்திற்குமிடையே தடைபட்டுள்ள சமாதானப் பேச்சுவார்த்தைகளை, மீண்டும் ஆரம்பிப்பதற்கான வாய்ப்புக்கள் இருப்புதாக அமெரிக்க பிரதிநிதியொருவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

அத்துடன் இரு நாடுகளுக்கும் தாம் ஏற்கனவே வழங்கியுள்ள உறுதிப்பாடுகளின்படி அவை செயற்பட வேண்டுமென அப்பிரதிநிதி மேலும் வலியுறுத்தியுள்ளார்.

இதேவேளை, சமாதானப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்படுவதற்கு பலஸ்தீனத்தினால் விதிக்கப்படும் எந்தவொரு நிபந்தனையினையும் ஏற்கப் போவதில்லையெனவும் பாதுகாப்பு சுவர்களை அகற்றப் போவதில்லையெனவும் இஸ்ரேல் பிரதமர் தெரிவித்துள்ளார். (தி-2)

## கெரில்லாத் தாக்குதலில்

# ஜப்பான் இராஜதந்திரிகள் இருவர் உயிரிழப்பு

(பக்தாத்)

ஈராக்கில் நேற்று முன்தினமகாலை மேறகொள்ளப்பட்ட கெரில்லாத் தாக்குதல் சம்பவம் ஒன்றில் ஜப்பானிய இராஜதந்திரிகள் இருவர் உயிரிழந்துள்ளனர்.

சதாம் ஹுசேனின் சொந்த ஊரான திக்ரித் நகரிலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இராஜதந்திரிகள் பயணம் செய்த வாகன சாரதி ஆபத்தான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை, பக்தாத்தின் தெற்குப் பகுதியில் இடம் பெற்ற மற்றுமொருதாக்குதல் சம்பவத்தில், ஸ்பெயினின புலனாய்வுத்துறையைச் சேர்ந்த 7 பேர் கொல்லப்பட்டுள்ளனர். (தி-9)



புதுடில்லியில் வினாத் நகரில் கடந்த ஞாயிற்றுக்கிழமை துப்புரவுப் பணியில் ஈடுபட்ட பாதுகாப்பு அமைச்சர் ஜோர்ஜ் பெர்னாண்டஸ்.

# அமெ. படையினரின் தாக்குதலுக்கு 46 ஈராக்கியர்கள் பலி

(பக்தாத்)

அமெரிக்கப்படையினர் மீது தாக்குதல்களை நடத்தி அவர்களைக் கொலை செய்ய முயற்சித்து வந்த 46 ஈராக்கியப் போராளிகளை அமெரிக்கப் படையினர் சுட்டுக் கொன்றுள்ளதுடன் 8 பேரைக் கைது செய்துள்ளனர்.

ஈராக்கிய போராளிகள் நடத்திய பல்வேறு தாக்குதல்களுக்கு பதிலாக அமெரிக்காவின் 4ஆவது சிற்றா யுத்தப்படையினர் நடத்திய எதிர் தாக்குதலிலேயே இவர்கள் கொல்லப்பட்டதாக அமெரிக்க இராணுவப் பேச்சாளரொருவர் கூறியுள்ளாா.

இந்தச் சம்பவத்தில் மேலும்18 போராளிகளும் 5 அமெரிக்க படையினரும் சிவிலியன் ஒருவரும் காயமடைந்துள்ளார்.

எனினும் கொல்லப்பட்ட ஈராக்கிய போராளிகள் மீது அமெரிக்கப் படையினர் ஒரே தடவையில் தாக்குதல்களை மேற்கொண்டார்களா என்பது குறித்த மேலதிக விவரங்கள் எதனையும் அவர்கள் வெளியிடவில்லை.

இதேவேளை ஈராக்கிய போராளிகள் நடத்திவரும் தொடர் தாக்குதல்களினால் இதுவரை 150 இற்கும் மேற்பட்ட அமெரிக்கப் படையினர் கொலலப்பட்டமை இங்கு குறிப்பிடத்தக்கது. (தி-2)

# அல்ஜெஸீரா செய்தியாளருக்கு ஸ்பானியா சமாதான விருது

(ஸ்பானியா)

அல்கெய்டா இயக்கத்துடன் தொடாபுடயவரெனக் குற்றஞ்சாட்டப்படும், அரபுத் தொலைக்காட்சியான அல்ஜெஸீராவில் கடமையாற்றி வரும் செய்தியாளர் ஒருவருக்கு ஸ்பானிய அரசசார்பற்ற நிறுவனமொன்று சமாதான விருதை வழங்கியுள்ளது.

2001ஆம் ஆண்டு செப்ரெம்பர் 11ஆம் திகதி அமெரிக்கா மீது நடத்தப்பட்ட பயங்கரவாதத் தாக்குதல்களையடுத்து ஓஸாமா பின்லேடனைப் பேட்டி கண்டவரான தைஸீ அலூனி இந்த விருதினைப் பெற்றுள்ளார்.

ஸ்பானியநீதிபதி பல்ரஸார் காஷோலின் உத்தரவின் பேரில் 2001 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் இவர் ஸ்பானிய புலனாய்வுப் பிரிவினரால் கைதுசெய்யப்பட்டார்.

அல்கெய்டா இயக் கத்திற்கு நிதி உதவிகளையும், தக வல்களையும் வழங்கியதுடன் போராளிகளை இயக்கத்தில் சேர்ததுக் கொள்வதற்கும் உதவினார் என இவர் மீது குற்றஞ்சாட்டப்பட்டது.

இந்நிலையில், ஈராக்கிலும் ஆப்கானிஸ்தானிலும் இடம் பெற்று வந்த யுத்தங்கள் தொடர்பாக துணிச்சலுடன் செய்திகளை சேகரித்தமைக்காகவே அலூனிக்கு இந்த சமாதான விருதை ஸ்பானியாவில் இயங்கும் அரசசார்பற்ற நிறுவனம் வழங்கியுள்ளது. (தி-2)

## திரைப்பட அறிமுக விழா

(யாழ்ப்பாணம்)

சலன சித்திரம் மாவட்டத் திரைக் கலைச் சங்கங்களின் சம்மேளனம் தயாரித்து வழங்கும் ''யாருக்கு யார் காவல்?'' எனும் 66 நிமிட தமிழ் விவரணத் திரைப்பட அறிமுகவிழா எதிர்வரும் 5ஆம்திகதி வெள்ளிக்கிழமை பி.ப. 3 மணிக்கு வடமராட்சி தென்மேற்கு பிரதேச சபை கலாசார மண்டபத்தில் இடம் பெறவுள்ளது. (தி-18)

# கண்காணிப்புக் குழுவுக்கு தலைவர் இல்லை பணிகளை தொடர்வதில் பல சிரமங்கள்

## பிரதித் தலைவர் ஹொக்லண்ட் தெரிவிப்பு

(கொழும்பு)

போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுத்தலைவர் இல்லாதமையினால் காண்காணிப்புப் பணிகளை மேற்கொள்வதில் பல சிரமங்களை எதிர் நோக்குவதாக கண்காணிப்புக்குழுவின் பிரதித்தலைவர் ஹொக்லண்ட் தெரிவித்துள்ளார்.

வெளிநாட்டு ஊடகம் ஒன்றிற்கு வழங்கிய விசேட செவ்வியிலேயே அவர் இதனைத்தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இலங்கை அரசிற்கும்- விடுதலைப் புலிகளுக்கும் இடையோனா சமாதானப் பேச்சுவார்த்தையில் அனுசரணையாளராக இருந்து வந்த நோர்வே சமாதானக் குழுவினர் கடந்த மாதம் 14ஆம்திகதி முதல் சமாதான முயற்சியில் இருந்து விலகியுள்ளமையினால் கண்காணிப்புப் பணிகளில் சிக்கல்கள் ஏற்பட்டுள்ளன.

கண்காணிப்புக் குழுவின் தலைவர் நோர்வேயில் இருக்க பிரதித் தலைவரும் களத்தில் நிற்கும் கண்காணிப்பாளர்களும் தமது பணிகளை சரிவர மேற்கொள்வது சாத்தியமில்லை.

இதனால், உடனடியாக கண்காணிப் புக்குழுவிற்கு ஒரு தலைவரை நியமிக்குமாறு நோர்வே அனுசரணையாளரிடம் கோரியுள்ளேன்.

இக்கோரிக்கையை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிடம் விடுக்க முடியாதுள்ளமையினாலேயே, நோர்வே அனுசரணையாளரிடம் விடுத்துள்ளேன்.

மேலும் நோர்வே அனுசரணையாளர்களிடமே தற்போது கண்காணிப்பு விடயம் சம்பந்தமான அறிக்கைகளை சமர்ப்பித்து வருகிறேன்.

இதேவேளை, படைத்துறை அமைச்சின் புதிய செயலாளர் சிறில ஜெயலத்தை அண்மையில் சந்தித்துப் பேசியுள்ளேன்.

ஆனாலும் களத்தில் ஏதும் சிக்கல் தோன்றும் போது அரச தரப்பில் யாருடன் தொடர்பு கொள்வது? என்பது கேள்விக்குறியாக இருக்கிறது என்று அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை,கடந்த ஒக்டோபர் மாதம் 16ஆம்திகதி தமிழீழ விடுதலைப்புலிகளின் ஆயுதக் கப்பல் ஒன்றை கடற்படையினர் தடுத்து நிறுத்த முற்பட்ட சமயம், கண்காணிப்புக் குழுத்தலைவர் அதனை விடுதலைப்புலிகளுக்கு தெரிவித்து அக்கப்பல் தப்பிச் செல்வதற்கு உதவினார் என்ற குற்றச்சாட்டின் பேரில் அவரை உடனடியாக நாட்டை விட்டு வெளியேறுமாறு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நோர்வே பிரதமருக்கு கடிதம் அனுப்பியதைத் தொடர்ந்து, நோர்வே அரசாங்கம் கண்காணிப்புக் குழுத்தலைவர் நிக்வே ரெலிவ்சனை திருப்பி அழைத்தமை தெரிந்ததே. (தி-63,10)

## சாவ. பொலிஸ் பிரிவு பிரதேசத்தில்

# கடந்த 11 மாத காலப்பகுதியில் 53 குற்றச் செயல்களே இடம் பெற்றன

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி பொலிஸ் நிலையதத்திற்குட்பட்ட பிரதேசத்தில் கடந்த 11 மாத காலப்பகுதியில் களவு, பாலியல் வல்லுறவு, வீடுஉடைப்பு போன்ற 53 சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. இவற்றுள் 47 சம்பவங்களுக்கு தீர்வுகள் காணப்பட்டுளளன. என சாவகச்சேரி பொலிஸ நிலையத்தின் குற்றத் தடுப்புப் பிரிவிற்கான உதவி இன்ஸ்பெக்டர் எறிக்ரோகித்த தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், சாவகச்சேரி பொலிஸ் நிலையப் பிரதேசத்தில் கசிப்பு உற்பத்தி, விற்பனை மற்றும் சட்டவிரோத சாராய விற்பனை போன்ற 200 சம்பவங்கள் பொலிஸாரால் பிடிக்கப்பட்டன. இக் குற்றங்கள் தொடர்பாக சாவகச்சேரி நீதி மன்றத்தில் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டு அதன் மூலம் 3 இலட்சத்து 93 ஆயிரத்து 850 ரூபா தண்டப் பணமாக குற்றவாளிகளிட்மிருந்து அறிவிடப்பட்டுள்ளது. அத்துடன் இப்பிர தேசத்தில் சட்ட விரோதமாக மணல், விறகு, மரம் போன்றவை வாகனங்களில் ஏற்றிச் செல்லப்படுவது பற்றி பொலிஸார் உடனடி நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர். சட்ட விரோதமாக மணல் ஏற்றிச் சென்ற 50 பேர் வாகனங்களுடன் கைது செயயப்பட்டனர். அத்துடன் விறகு அனுமதிப்பத்திரமின்றி விறகு ஏற்றிச் சென்ற 25 சம்பவங்களும் இடம் பெற்றுள்ளன.

இதேசமயம இப்பிரதேசத்தில் குற்றச் செயல்களை அதிகரிக்கமால் தடுக்கும பொருட்டு இரவு நேர ரோநது நடவடிக்கைகளை பொலிஸ நிலையத்தின பிரதான இன்ஸ்பெக்டரான எஸ்.பீ.என்.அபெயவர்த்தனா, மேறகொண்டுள்ளார். அத்துடன் பொலிஸ - பொதுமக்கள் நல்லுறவை வளர்க்கும் பணிகளும மேற்கொள்ளப் பட்டுவருகின்றன.

சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி, இந்துக்கல்லூரி போன்றவற்றில் பயில்கின்ற உயர்தர வகுப்பு மாணவர்களுக்கு வீதிப்போக்குவரத்து ஒழுங்கு விதிகள் பற்றிய கருத்தரங்குகளும் தற்போது நடத்தப்பட்டு வருகின்றன.

மேலும் சாவகச்சேரி சந்தைப் பகுதியில் சைக்கிள் பாதுகாப்புத் திட்டத்தையும் இரவு நேரங்களில் வீதி விளக்குகள் அமைக்கும் திட்டத்தினையும் உடன் அமுலாக்கும்படி சாவகச்சேரி நகரசபை ஆணையாளரிடம் கோரிக்கை விடப்பட்டுள்ளது.

இதேவேளை, ஏ-9 பிரதான வீதியில் அதிவேகத்தில் செலுத்தப்படும் வாகனங்களை மானிகள் பதிவுகள் பிரகாரம் இடைமறித்து தண்டம் அறிவிடப்பட்டு வருகின்றது. இது தவிர சாவகச்சேரியில் கடந்த 11 மாத காலப்பகுதியில் இரண்டே இரண்டு சைக்கிள்களவுகள் மட்டுமே இடம்பெற்றுள்ளது எனவும் குறிப்பிட்டார்.

மேலும் கடந்த வெள்ளியிரவு சாவகச்சேரி டச்சு வீதியில் உள்ள சுப்பிரமணியம் சங்கரப்பிள்ளை என்பவரின் வீட்டில் 4 இலட்சம் ரூபா பொறுமதியான தங்கை நகைகள் இரண்டு கையடக்கத் தொலைபேசிகள் மற்றும் 500ரூபா ரொக்கமும் திருடப்பட்டுள்ளது. இத் திருட்டுச் சம்பவத்தில் ஈடுபட்டவர்களை எனது தலைமையில் சென்ற பொலிஸ் உத்தியோகத்தர்களான ஆர். தனஞ்செயன் (18380), எஸ்.விநாயகமூாத்தி (22342) ஆகியோர் கொண்ட குழு பிடித்துள்ளனர்.

இதேவேளை,விடுதலைப்புலிகள் உறுப்பினர்களுடனான உறவுகள் பற்றிச் கேட்கப்பட்ட சமயம் அவ் உறவு மிகவும் நல்ல படியாக இருப்பதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார். (தி-16)






உலக எயிட்ஸ் தினத்தை முன்னிட்டு யாழ். வீரசிங்க மண்டபத்தில் நேற்று இடம்பெற்ற நிகழ்வுகளில் கலந்து கொண்டோரைப் படங்களில் காணலாம்.

# பொதுச் செயலாளர் பதவிப் போட்டியில் லஷ்மன்கதிர்காமருக்கு புதிய சவால்கள்

(கொழும்பு)

பொதுநலவாய அமைப்பின் பொதுச் செயலாளர் பதவிக்குப் போட்டியிடவுள்ள இலங்கையின் முன்னாள் வெளியுறவு அமைச்சர் லஷ்மன்கதிர்காமர் புதிய பல சவால்களை எதிர்நோக்க வேண்டிய சூழ்நிலை உருவாகியுள்ளது.

நியூசிலாந்து நாட்டின் முன்னாள் வெளியுறவு அமைச்சரும், தற்போது பொதுநலவாய அமைப்பின் பொதுச் செயலாளரகாவும் உள்ள டொன் மக்கினன் அடுத்த தடவையும் தொடர்ந்தும் செயலாளர் பதவியை வகிப்பதற்குப் பல தரப்புகளிலும் இருந்து ஆதரவு கிடைத்து வரும் அதேவேளை, நியூசிலாந்து நாட்டுப் பிரதமர் ஹெலன் கிளாக்கும் இவரது பதவி நீடிப்புக்குத் தான் பூரண ஆதரவு வழங்குவதாகத் தெரிவித்துள்ளார்.

அத்துடன்,பொது நலவாய அமைபபின் பொதுச் செயலாளர் பதவிக்குரிய தகுதியும் அனுபவமும் டொன் மக்கினனுக்கு உண்டு.

எனவே, தற்போது பொதுச்செயலாளராகப் பதவி வகித்து வரும் இவர் அடுத்த தடவையும இதே பதவியில் இருப்பதற்குரிய பதவி நீடிப்பை வழங்குவதற்கு தான் பூரண ஆதரவு வழங்குவதோடு, எதிர்வரும் 5ஆம் திகதி நைஜீரியாவில் நடைபெறவுள்ள பொது நலவாய நாடுகளின் தலைவர்களின் கூட்டத்தில் தான கலந்து கொண்டு டொன் மக்கினனுக்கு ஆதரவு வழங்குவதாகவும் நியூசிலாந்து பிரதமர் ஹெலன் கிளாக் மேலும் தெரிவித்துள்ளார்.

எனினும்,தென்னாபிரிக்காவின் தூண்டுதலுக்கமைய இலங்கையும் மேற்படி பொதுச் செயலாளர் பதவிக்குப் போட்டியிடவுள்ளதுடன் இதற்கு இலங்கையின் முன்னாள் வெளியுறவு அமைச்சர் லஷ்மன் கதிர்காமரை இத்தேர்தலில் போட்டியிட வைப்பதற்கு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அவரை பிரேரித்திருப்பதுடன் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் இதனை வழிமொழிந்துள்ளார்.

மேற்படி பதவியில் இதுவரை காலமும் வெள்ளை இனத்தவர்களே இருந்துவந்த நிலையில் முதன் முதலாக கறுப்பினத்தவர் ஒருவர் இப் பதவிக்குப் போட்டியிடவுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

ஆயினும் இலங்கையில் கடநத இரு தசாப்த காலமாக இடம் பெற்ற யுத்த நடவடிக்கைகளின் போது ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு உறுதுணையாக இருந்து, தமிழர்களைக் கொன்று குவிப்பதில் முன்னணியில் திகழ்ந்தவரான லஷ்மன் கதிர்காமர் பொதுநலவாய அமைப்பின் பொதுச் செயலாளர் பதவிக்குப் போட்டியிடுவதையும் அவரையும் அப்பதவிக்குத் தெரிவு செய்யக் கூடாதுதெனவும் உலககெங்கிலுமுள்ள பல தமிழ் அமைப்புக்களும், பொதுநலவாதிகளும் கோரிக்கை விடுத்து வருவதாகத் தெரியவருகிறது.

இந்நிலையில், மேற்படி பதவியில் தற்போது உள்ள டொன் மக்கினனுக்கு நியூசிலாந்து உட்பட மற்றும் சில நாடுகளும், ஆதரவு தெரிவித்துவருவதுடன், இப் பதவிக்குப் போட்டியிடவுள்ள லஷ்மன் கதிர்காமருக்கு பல தமிழ் அமைப்புக்கள் எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றமை அப்பதவியில் அவர் போட்டியிடுவதற்குப் பெரும் சவாலாக அமைந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (தி-18,63)


## யார் இந்த மீனா?




எமது சமூகத்தில் மேற்கொள்ளப்படும்-மீனா பெண் பிள்ளைகளின் நிலையினை மேம்படுத்துவதற்கான நேரடி முயற்சியாகும். இதன் நோக்கம் பிள்ளைகள், வயது வந்தோர் ஆகியோர் மத்தியில் பெண்பிள்ளைகளின் நிலைமை பற்றி உணர்வூட்டி, கலந்துரையாடல்களை ஊக்குவிப்பதாகும்.

மீனா யுனிசெவ் நிறுவனத்தினால் பெண்பிள்ளைகளின் உரிமைகளைப் பரப்ப என உருவாக்கப்பட்ட கதாபாத்திரம். அரசாங்கங்களும் அரச சார்பற்ற நிறுவனங்களும் அவளின் பெற்றோராவர்.

மீனாவின் விவேகமும், உறுதியான மனப்போக்கும் வாழ்க்கைப் பிரச்சினைகளுக்குப் பரிகாரம் காண வகை செய்கின்றன. வாழ்க்கையில் அவளுக்குள்ளஅமோகமான பற்றும் எதிர்காலத்திற்கென அவள் வைத்துள்ள தெளிவான ஆசைகளும் அவளைப்பெண்பிள்ளைகளின் உரிமைகளுக்காக உழைக்கும் போராளயாகவும் தென்னாசியா முழுதுமுள்ள சிறுமிகளுக்கு முன் மாதிரியாகவும் விளங்கச் செய்கின்றன.



unicef

உங்கள் தொடர்புகளுக்கான எங்கள் முகவரி:-

அறை எண் - 30,
யாழ். போதனா வைத்தியசாலை,
யாழ்ப்பாணம்.

(C/6946)

## இன்று ஒரு தகவல்

# தர்மம்

ஒரு ஊரில் ஒரு ராஜா இருந்தார். அவர் ஒருநாள் மாறு வேடம் போட்டுக்கொண்டு நகர்வலம் வந்தார். இரவு நேரம் தனது குதிரை மீது ஏறிக்கொண்டு,தனது நாடும் நகரமும் எப்படி இருக்கின்றதென்று சுற்றிப்பார்த்துக் கொண்டுவந்தார்.

நகரின் வெளியே ஒருபுளிய மரதின் கீழ் ஒருவன் பரிதா பமாக உட்கார்ந்திருந்தான். அந்தப் பக்கமாகச் சென்ற ராஜா இவனைப பார்த்தார். "ஏன் இந்த நேரததில் இப்படி உட்கார்ந்திருக்கிறாய்? " என்று கேட்டார். "ஐயா... நான் ஊருக்குள் செல்ல வேண்டும். என்னைக் கொஞசம் உங்கள குதிரை மீது ஏற்றிக்கொண்டு செலகின்றீர்களா?" என்று கேட்டான். "சரி! ஏறு!"என்றார் ராஜா.

என்னால் ஏறமுடியாது. நீங்கள் தான் என்னைத் தூக்கி அங்கே உட்காரவைக்க வேண்டும். ஏனென்றால் நான் கை, கால்விளங்காதவன்.எனது 2கால்களும் உணர்ச்சி இல்லாத மரக்கட்டைபோல் ஆகிவிட்டது. அதனாலநடக்க முடியாமல் இங்கே இருக்கின்றேன்" என்றான்.

அய்யோ பாவம் என்று பரிதாபப்பட்டு ராஜாவும் கீழே இறங்கி அவனைத் தூக்கி குதிரை மீது உட்கார வைத்தார். அவ்வள வுதான்.. அந்த ஆள் குதிரையில் விரைந்து தப்பிவிட்டான். ஆமாம் அவன் உண்மையில் கை,கால்விளங்காதவன் அல்ல. ஒரு திருடன். குதிரையைக் கடத்திக் கொண்டு செல்வதற்காக இப்படி வேஷம் போட்டிருந்தான்.

ராஜா ஏமாந்து போய் கீழே நின்று விட்டார். அவருக்கு மிகுந்த அவமானமாகி விட்டது. பேசாமல் அரண்மனைக்குத் திரும்பி விட்டார். யாரிடமும் இதைக் கூறவும் இல்லை.சிறிது நாட்கள் கழிந்த பின் ஒருநாள் அரண்மனையில் வழக்கு விசாரணை நடந்து கொண்டிருந்தது. ராஜா ஒவ்வொரு வழக்காக விசாரித்துத் தீர்ப்பு வழங்கிக் கொண்டிருந்தார்.

தீடீரெனறு ஒரு ஆளைக் கொண்டுவந்து நிறுத்தினார்கள். "மன்னா... இவன் பல இடங்களில் திருடியுள்ளான். கொள்ளைய டித்திருக்கிறான். நேற்றிரவு இவன் ஒரு வீட்டில் நுழைய முயற்சி செய்த போது நமது காவலாளிகள் பார்த்து விட்டனர். அதுதான பிடித்துக் கொண்டு வந்தனர்" என்றார் அமைச்சர்.

ராஜா நிமிர்ந்து பார்ததார். அன்று தனனை ஏமாற்றியவன் தான் இவன் என்பதைப் புரிந்து கொண்டார். ஆனால அவன் ராஜாவை இனங்காணவில்லை. ஏனென்றால் அன்று ராஜா மாறுவேடத்தில் அல்லவா இருந்தார்.

ராஜா தீர்ப்பு நாளை வழங்கப்படும் என்று கூறி சபையைக கலைத்து விட்டார். அந்த ஆளைச் சிறையில் அடைத்து விட்டனர்.

அன்றிரவு எல்லோரும் தூங்கிய பின் ராஜா ரகசியமாக சிறைக கூடம் சென்று அந்தத் திருடனைப் பார்த்தார். என்னை உனக்கு அடையாளம் தெரிகின்றதா? என்று கேட்டார். ஏன் இப்படிக் கேட்கி றீர்கள். நீங்கள் மகாராஜா அல்லவா? என்றான். இதற்கு முன் என்னை எங்காவது பாாத்த ஞாபகம் இருக்கின்றதா என்றாா. இல்லை என்றான். ராஜா தனது அலங்காரங்களை அகற்றினார் அவனுக்கு உடனே நினைவு வந்து விட்டது.

மன்னா அன்று குதிரையைக் கடத்திக் கொண்டு போனது உங்க ளிடமிருந்தா, என்னை மன்னித்து விடுங்கள். என்று காலில் விழுந தான் "இதோ பாரப்பா... நான் கூறுவதைக் கவனமாகக் கேள்! நாளைக்கு நான் தண்டனை கொடுக்கப போவது திருட முயன்ற வழக்குக்காக. இன்று நீ என்னை ஏமாற்றிய தற்கு நான் உன்னைத் தணடிக்கப் போவதில்லை. நான் உன்னிடம் ஏமாந்த விசயத்தை ந யாரிடமும் கூறிவிடாதே. அந்த ரகசியம் நமக்குள் இருக்கட்டும் என்றார்.

இந்தக் கதையை ஒரு நண்பர் என்னிடம் கூறிவிட்டு "அந்த ராஜா ஏன் அப்படிச் சொன்னார்? என்று கேட்டார். நான் யோசித்து பார்த்து விட்டு பதில் கூறினேன். ராஜா திருடனிடம் ஏமாந்து விட்டார் என்ற விசயம் தெரிந்தால் அது கேவலம் அல்லவா? அதனால் அப்படிக் கூறியிருப்பார் என்றேன். நண்பர் சிரித்தார். எல்லோரும் இப்படித்தான் கூறுகின்றனர். ஆனால் அது காரணமல்ல என்று தனது விளக்கத்தைக் கூற ஆரம்பித்தார்.

அதாவது அந்தச் சம்பவம் வெளியே தெரிந்தால் கஷடப் படுவர்களுக்கு உதவி புரிய எல்லோரும் தயங்குவார்கள். உண்மை யில் கஷ்டப்படுகின்றவனைச் சந்தித்தாலும் இவன் ஏமாற்றுப் பேர் வழியோ என்று எண்ணுவார்கள். பின்பு நாட்டில் தர்மம் கெட்டு விடும். யாரும் உதவிசெய்ய முன்வரமாட்டார்கள். அப்படி ஒரு நிலை நமது நாட்டிற்கு வரவேண்டாம் என்றுதான் அப்படிக் கூறினார் என்றார். ராஜா என்றால் இப்படியல்லவா இருக்க வேண்டும்.

நமது ஆள் ஒருவன் குதிரையில் வந்து கொண்டிருந்தான். வழியில் ஒருவன் ஐயா எனக்கு கை,கால் விளங்கவில்லை என்னை ஏற்றிச் செல்ல முடியுமா? என்றான் இவன் "வேணடாம் நீ என்னை ஏமாற்றிவிட்டு இந்தக் குதிரையைக் கடத்திக் கொண்டு போய் விடுவாய்" என்றான். அது எப்படி இவவளவு சரியாகச் சொல்கிறாய் என்றான் அவன். நான் ஏற்கனவே ஒருவனை அது போல் ஏமாற்றிவிட்டுத்தான் இந்தக் குதிரையை தள்ளிக் கொண்டுவந்தேன் என்றான் இவன்.


தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# கட்சிகள் இரண்டும் இணைவதன் மூலமே பேச்சுக்களை ஆரம்பிக்க முடியும்

## விநாயகமூர்த்தி எம்.பி. தெரிவிப்பு

(மட்டக்களப்பு)

நாடு தற்போது சிக்கியுள்ள அரசியல் நெருக்கடிகளில் இருந்து



மீட்சி பெற வேண்டுமானால், ஜனாதி பதி சந்திரிகா குமராதுங்கவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் இணைந்து தமிழீழ விடுதலைப்புலி களுடன் சமாதானப் பேச்சுவார்த் தைகளை ஆரம்பிக்க வேண்டும் என்று அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சியின் தலைவரும் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட எம்.பியுமான அ. விநாயக மூர்த்தி தெரிவித்துள்ளார்.

அகில இலங்கைத் தமிழ் காஙகிரஸ் கட்சியின் மட்டக்களப்புக் கிளையினால் நேற்று முன்தினம் ஒழுங்கு செய்யப்பட்ட கூட்டமொன் றில் உரையாற்றும் போதே அ. விநா யக மூர்த்தி எம்.பி. மேற்கண்டவாறு தொிவித்துள்ளார்.

அங்கு அவர் தொடர்ந்து பேசுகை யில் கூறியதாவது,

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் மக்கள விடுதலை முன்னணியும் கூட்டி ணைவதற்கான ஒப்பந்தம் ஒன்றில் இருவரும் கைச்சாத்திடுவார்களா னால் அதன் மூலம் நாடு மீண்டும் ஒரு பொதுத் தேர்தலைச் சந்திக்க வேண்டி ஏற்படும்.

ஜனாதிபதிக்கும்,பிரதமருக்கும் இடையிலான பேச்சுவார்த்தைகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

இப்பேச்சுக்களின் அடிப்படை யிலேயே சமாதான முயற்சிகளை முன்னெடுப்பதா?அல்லது இல்லையா என்ற முடிவு காணப்படும்

இருவருக்குமிடையிலான கடந்த பேச்சுக்களில் சுமுகமான முடிவுகள் எட்டப்பட்டாலும் அவை பூரணமான முடிவுகளாக இல்லை என்றும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார். (ம)

# இலங்கைக்கு உதவி வழங்கும் நாணயநிதிய பணிப்பாளர் சபைக்கூட்டம் ஒத்திவைப்பு

(கொழும்பு)

இலங்கைக்கு உதவி வழங்கும் கடன் தொகையை அங்கீகரிப்பதற் காக நடைபெறவிருந்த சர்வதேச நாணய நிதியத்தின் பணிப்பாளர்கள் சபைக் கூட்டம் ஒத்திவைக்க்ப்பட் டுள்ளது.

தென்னிலங்கையில் தற்போது நிலவும் அரசியல் ஸ்திரமற்ற சூழ் நிலை காரணமாகவே இக் கூட்டம் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

சர்வதேச நாணய நிதியமும், உலக வங்கியும் இலங்கைக்கு ஆயிரத்து 680 கோடி ரூபாவை கடனு தவியாக வழங்க முன்வந்திருந்தன.

அத்துடன் மூன்றாண்டு கால அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக சர்வதேச நாணய நிதியத்தால் வழங்கப்படும் வறுமை ஒழிப்பு மற்றும் அபிவிருத்திப் பணிகளின் இவ்வாண் டுக்கான 720 கோடி ரூபா தவணைப் பணமும் இடைநிறுத்தப்பட்டுள்ளது.

மேலும், உலக வங்கி வழங்க முன் வந்திருந்த 960 கோடி ரூபா நிதி உதவியும் தாமதம் அடைந்துள் ளது.

இதேவேளை, இலங்கையின் அரசியல் நெருக்கடி நிலையால், வெளிநாடுகளின் நிதி நிறுவனங்க ளின் உதவியுடன் யுத்தத்தால் பாதிக் கப்பட்ட பிரதேசங்களின் புனரமைப்பு மற்றும் அபிவிருத்திப்பணிகளிலும் ஸ்தம்பித நிலை ஏற்படும் நிலை ஏற் பட்டு இருப்பதாகவும்,

சமாதான முயற்சிகளின் போது உறுதியளிக்கப்பட்ட நிதி தொடர்பான விடயங்களில் மேலும் பல தாமதங் கள் ஏற்படலாம் என அரசியல் அவதானி கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.(தி)

## இராசி பலன்

**02.12.2003**

**(கார்த்திகை 16,செவ்வாய்)**

**நவமி பி.ப. 04.45 வரை**

**பூரட்டாதி பி.ப. 4.01 வரை**

**இராகுகாலம் - 03.15-04.45**

**சுபநேரம் - 10.45-12.15**

**மேடம்**
காரியதாமதம், பொருள்விரயம், அமைதிக்குறைவு, சயனசுகக்குறைவு,

**இடபம்**
எதிர்பாராதநன்மை, செய்தொழில்முன் னேற்றம், காரியசத்தி, கலந்துரையாடல்

**மிதுனம்**
நல்லசம்பவம், பெரியோர்உதவி, எடுத்தகருமம் கைகூடும், போசனசுகம்

**கடகம்**
சரீரப்பிரயாசை, காரியதாமதம், புதிய சிந்தை, புத்திசாதுரியம்,

**சிங்கம்**
போசனநன்மை, எதிர்பாராத பிரச்சினை, காரியதாமதம், சிந்தனைமிகுதி,

**கன்னி**
களஸ்திரநன்மை, சகோதரர்உதவி, முயற்சிகைகூடும், தனலாபம்,

**துலாம்**
ஆரோக்கியம், தனவரவு, நண்பர்கள் சந்திப்பு, காரியசித்தி,

**விருச்சிகம்**
தாழ்ந்தசுபாவம், காரியஇடையூறு, உஷ்ணவியாதி, சொத்துப்பிணக்கு.

**தனுசு**
கல்வியில்ஆர்வம், தன்னம்பிக்கை குறைவு, முயற்சிதாமதம், ரோகநிலை.

**மகரம்**
கூட்டுமுயற்சி, உறவினர்வருகை, புதியபொருள்சேர்க்கை, பிரயாணநன்மை

**கும்பம்**
கௌரவக்குறைவு, மாதர்நட்பு, முயற்சிதாமதம், தனவிரயம்.

**மீனம்**
பெரியோர்மதிப்பு, நல்லமுயற்சி, சயனசுகம், தொழில்சிந்தை.

(பழையநேரப்படி கணிப்பிடப்பட்டது)

- வளவன்.

# தனியார் பஸ் உரிமையாளர் போராட்டம் கைவிடப்பட்டது

(கொழும்பு)

தனியார் பஸ் உரிமையாளர் களால நேற்று முதல் விஸ்தரிக் கப்படவிருந்த வேலை நிறுத்தப் போராட்டம் தற்காலிகமாக இடை நிறுத்தப்பட்டுள்ளது.

கடந்த 27 ஆம் திகதி முதல் ஆரம பிக்கப்பட்ட போராட்டம், நேற்று முதல் நாடளாவிய ரீதியில் விஸ்தரிக் கப்படவிருந்தது.

இந் நிலையில் க.பொ. த. சாதா ரண தரப் பரீட்சைக்கு தோற்றும் மாணவர்கள் போக்குவரத்து செய்வதில் பல சிரமங்களை எதிர் நோக்குவதாக கல்வி அமைச்சர் மற்றும் கல்வி அதிகாரிகள் பல ராலும் சுட்டிக்காட்டப் பட்டதைத் தொடர்ந்து, போக்கு வரத்து அமைச் சர் திலக் மாரப்பன, தனியார் பஸ் உரி மையாளர்களை நேற்றுச் சந்தித்துப் பேசியுள்ளார்.

நேற்று ஆரம்பமாகியுள்ள க.பொ.த. சாதாரண தரப் பரீட்சைக்கு தோற்றும் தென்னிலங்கை மாணவர்கள் போக்கு வரத்தில் பல சிரமங்களை எதிர்நோக் கியிருநதனர் என்பதை அமைசசர் அங்கு சுட்டிக்காட்டினார்.

இதனையடுத்து மேற்படி மாண வர்களின் நலன்கருதி வேலை நிறுத் தப் போராட்டத்தை தற்காலிகமாக இடைநிறுத்தி வைப்பதாக தனியார் பஸ் உரிமையாளர் சங்கப் பிரதி நிதிகள் அமைச்சரிடம் உறுதிய ளித்தனர். (தி-60,10)

# மாவீரர் தினத்தன்று பிறந்த 14 குழந்தைகளுக்கு சேமிப்புக் கணக்கு திறப்பு

(மருதங்கேணி)

தமிழீழ மாவீரர் தினத்தன்று பிறந்த 14 குழந்தைகளுக்கு கிராமிய அபி விருத்தி வங்கி சிறுவர் சேமிப்பு கணக்கொன்றை ஆரம்பித்து வைத் துள்ளது.

மேற்படி வங்கியின் முல்லைத் தீவு கிளையினால் 3ஆண் குழந்தை களுக்கும் ஒரு பெண் குழந்தைக் கும், கிளிநொச்சிக் கிளையினால் 4 ஆண் குழந்தைகளுக்கும் 2 பெண் குழந்தைகளுக்கும், வவுனியா கிளையினால் 2 ஆண் குழந்தை களுக்கும் ஒரு பெண்குழந்தைக்கும, மன்னார் கிளையினால் ஒரு பெண் குழந்தைக்கும் மொத்தம் 14 குழந்தை களுக்கு தளிர் சேமிப்பு கணக்கு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதுவரை வைத்தியசாலைகளில் பதிவு செய்யப்படாதவர்கள் இருப் பன் அருகிலுள்ள கிராமிய அபிவிருத்தி வஙகிக்கிளையில் பதிவுகளை உடன் மேற்கொள்ளுமாறும் கேடகப்பட்டு ள்ளது. (தி-35)

# தற்போதைய நிலைமைகள் குறித்து ஜே.வி.பி. இன்று முதல் பிரசாரம்

(கொழும்பு)

தற்போதைய அரசியல் நிலை மைகள் குறித்து விளக்கும் முகமாக நடாளாவிய ரீதியில் இன்று செவ்வாய்கிழமை பிரசார நடவடிக்கைகளை ஜே.வி.பி ஆரம் பிக்கவுள்ளது.

சமாதான முயற்சிகளை சரி யான முறையில் மேற்கொண்டு நாட்டைப் பாதுகாக்க மக்களின் உதவியைக் கோரி 13 நாள் பிரசார வேலை ஆரம்பிக்கப்படவிருப்பதாக ஜே.வி.பி. விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப்பிரசார வேலைத் திட்டத்தின் கீழ் 10 பொதுக்கூட்டங்களை நடத்து வதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது. (த)

# ஜனாதிபதி நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஆட்சிமுறை நம்நாட்டுக்கு ஏற்புடையதல்ல

## ஜே.வி.பி. உறுப்பினர் அனுராதிஸ்ஸ நாயக்க

(கொழும்பு)

மனித உரிமைகள் ஆணைக் குழுவின நடவடிக்கைகளுக்கு தேவை யான நிதியை வழங்கவேண்டும். என்ற வகையில் விடுக்கப்பட்டகோரிக் கைகளுக்கு திறைசேரி உரிய நட வடிக்கை எடுக்கத் தவறிவிட்டது.

இவ்வாறு பாராளுமன்ற உறுப பினர் நிமல் சிறீபாலடிசில்வா நேற்று பாராளுமன்றில் நடைபெற்ற வரவு செலவுத் திட்டம் மீதான 3ஆவது குழு நிலை, விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் தெரிவித்தார். அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

இதனால் மனிதஉரிமைகள் ஆணைக்குழுவின் நடவடிக்கைகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன.

இதற்கு தொழில் அமைச்சரும், அரசாங்கத்தின் பிரதம அமைப்பாளருமான மகிந்த சமர சிங்கா பதிலளித்துப் பேசுகையில்,

இவ்விடயம் தொடர்பாக திறை சேரிக்கு ஏற்கனவே அழைப்பு விடுக்கப் பட்டுள்ளது. ஆயினும், சபாநாயகர் இவ்விடயத்தில் தலையிட்டு பிரச்சி னைக்கு தீர்வுகான வேண்டும் என்றார்.

அதற்கு பாராளுமனற உறுப்பினர் நிமல் சிறீபாலடிசில்வா கருத்து கூறுகையில்,

உபமதிப்பீடு ஒன்றை சமர்ப்பிப் பதன் மூலமாவது மனித உரிமை கள ஆணைக்குழுவிற்கு நிதி வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்

இதேவேளை, தேர்தல்கள் ஆணை யாளர் அலுவலகத்திற்கு போதிய நிதி ஒதுககீடு செய்ய அரசாங்கம் தவறி விட்டது. இதனால், தேர்தல் திணைக் களம் அதன் கடமைகளை உரிய முறையில் பூர்த்திசெய்ய முடியாதநிலை ஏற்பட்டுள்ளது.

இவை தவிர ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தமக்கென ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியைக் கொண்டு, பலதரப்பட்ட நலன்புரி நடவடிக்கை களை மேற்கொண்டு வருகிறார் என்றார்.

இதற்கிடையில் கடந்த நவம்பர் மாதம் 21ஆம் திகதி டெய்லி மிரர் பத்திரிகையில் வெளியிடப்பட்ட செய்தி தொடர்பாகப் பாராளுமன்ற உரிமைகள் குழுவிற்கு தெரிவிக்க வேண்டும் என்ற பிரேரணை ஒன்று சபை முதல்வர் டயிள்யூ ஜே.எம். லொக்குபண்டாரவினால் சமர்ப்பிக் கப்பட்டது.

சபாநாயகரின் முன்னைய தீர் மானங்களை உள்ளடக்கும் வகை யில், டெய்லி மிரர் பத்திரிகை செய்தி வெளியிட்டிருந்தது.

தொழில் அமைச்சர் மஹிந்த சமரசிங்க இதுபற்றிப் பேசுகையில்,

நிறைவேற்று அதிகாரமும், சட்ட வாகது அதிகாரமும் கொண்ட பாரா ளுமன்றத்தில் நல்ல விளக்கத்து டன் இணைந்து பணியாற்றுவது அவசியம்.

ஜனநாயகத்தைப் பாதுகாக்கும் உன்னத கடமை பாராளுமன்றத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது என்றார்.

இதேசமயம், குழுநிலை விவா தத்தின்போது பிரஸ்தாபிக்கப்பட்ட மனித உரிமைகள் ஆணைக்குழு நிதி ஒதுக்கீடு பற்றி சபாநாயகர் ஜோசப் மைக்கல் பெரேரா கருத்து வெளியிடுகையில், ஆணைக்குழு வினால் மேற்கொள்ளப்பட்ட தீர் மானங்களை நடைமுறைக்கு இடு வதற்கான வழிமுறைகள் மிகவும் அவசியம் என்றார்.

மக்கள் விடுதலை முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் அனுர குமார திஸ்ஸநாயக்க உரை யாற்றுகையில், நிறைவேற்று அதி காரம்முடைய ஜனாதிபதிப் பதவி இந்நாட்டிற்கு ஏற்புடையது அல்ல என்றார்.

எந்தவொரு கட்சிக்கும் ஒரு விடயம் குறித்து ஒரே தீர்வைக் காண்பதற்கு முடியாத நிலை தோன்றியுள்ளது.

தற்போது சமூகத்தில் இடம் பெற்றுவரும் விடயங்களைக் கவனத் தில் கொண்டு, செயற்படுவது பொறுப்பு வாய்ந்த ஒவ்வொரு கட்சியினதும் கடமை.

இதனைக் கருத்தில் கொண்டே பாராளுமன்ற ஒத்திவைப்பின் போது எமது கட்சி மௌனமாக இருந்தது என்று அவர் மேலும் தெரிவித்தார்.

இதேசமயம், ஜனாதிபதிக்கு உள்ள அதிகாரங்களிலும் பார்க்க பாராளுமன்றத்திற்கு கூடிய அதி காரம் இருப்பதாக பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் லக்ஷ்மன் கிரியல்ல தெரிவித்துள்ளார்.

இதன் காரணமாகவே பாராளு மன்றத்திற்கு பதிலளிக்க வேண்டிய பொறுப்பு ஜனாதிபதிக்கு இருப்ப தாக அரசியல் சாசனத்தில் பரிந்து ரைக்கப்பட்டுள்ளது.

அத்துடன், ஜனாதிபதியின் பொறுப்பில் உள்ள நிறுவனங்களுக்கு பாராளுமன்றம் நிதி ஒதுக்க மறுத் தால், எவ்வித நடவடிக்கையினை யும் முன்னெடுக்க முடியாது.

மேலும், நம் நாட்டு அரசியல் சாச னத்தை அர்த்தமுள்ளதொன்றாக உருவாக்குவதற்கு அரசியல் சாசன நீதிமன்றம் ஒன்று தேவை என்றார்.

ஜனாதிபதி உட்பட அமைச்சர்க ளுக்கான நிதி ஒதுக்கீடு தொடர் பான குழு நிலை விவாதமே நேற்று நடைபெற்றது.

(தி-60,61,10)



கடந்த ஞாயிற்றுக்கிழமை சென்னையில் நடைபெற்ற மரதன் ஓட்டப் போட்டியில் முதலிடங்களைப் பெற்ற மகேஷ்சிங்பாத்தியும் பசோத் திமாதேவியும.

# சிம்பாவேக்கு எதிரான போட்டியில் மேற்கிந்தியத் தீவுகள் அணி வென்றது

மேற்கிந்தியத் தீவுகள் மற்றும் சிம்பாவே அணிகளுக்கிடையில் நடைபெறற 5ஆவதும் இறுதியுமான ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் போட்டியில் மேற்கிந்தியத் தீவுகள் அணி 8 விக்கெட்டுக்கள் வித்தி யாசத்தில், சிம்பாவே அணியை வெற்றிகொண்டுள்ளது. இந்த வெற்றி மூலம் 5 ஒருநாள் சர்வதேச கிரிக் கெற்போட்டிகள் கொண்ட இத் தொடரை 3:2 என்ற போட்டிப்பெறு பேறுகள் அடிப்படையில் மேற்கிந் தியத்தீவுகள் அணி வெற்றிபெற்றுள் ளது.

ஹாரேயில் நடைபெற்ற இவ் 5ஆவது ஒருநாள் சர்வதேசப் போட் டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய சிம்பாவே அணி 47.5 ஓவர்களில் தனது சகல விக்கெட்டுக்களையும் இழந்து, 196 ஓட்டங்களை மட்டுமே பெற்றுக்கொண்டது. அணியின் துடுப்பாட்டத்தில் மைக்வே மூலன் 36 ஓட்டங்களையும், வி.ரொயஸ்ற் 34 ஓட்டங்களையும், அணித்தலை வர் க்றிஸ்ரிக் 30 ஓட்டங்களையும் தமது அணிக்காகப் பெற்றுக்கொடுத் தனர்.

பந்துவீச்சில் மேற்கிந்தியத் தீவு கள் அணி சார்பில் கிறிஸ்கெயில் 24 ஓட்டங்களை விட்டுக்கொடுத்து 4 விக்கெட்டுக்களைக் கைப்பற்றிய அதேவேளை, பிடேல் எட்வெட், ரிக் ஹாடோ பெவல் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் தமது அணிக்காகக் கைப்பற்றினர்.

பின்னர் பதிலுக்குத் துடுப்பெடுத் தாடிய மேற்கிந்தியத் தீவுகள் அணி, 24.4 ஓவர்கள் முடிவில் 2 விக்கெட் டுக்களை மாத்திரம் இழந்து வெற்றி இலக்கான 197 ஓட்டங்களைப் பெற்று வெற்றியீட்டியது.

இதன்போது மேற்கிந்தியத் தீவு கள் அணி சார்பில் துடுப்பெடுத்தாடிய கிறிஸ்கெய் ஆட்டமிழக்காது 112 ஓட்டங்களையும், பிரைன்லாரா 41 ஓட்டங்களையும் தமது அணிக்காகப் பெற்றுக் கொடுத்தனர்.

இப்போட்டியில் சிறப்பாட்டக்கார ராக மேற்கிந்தியத் தீவுகள் அணி யின் கிறிஸ்கெயில் தெரிவுசெய்யப் பட்டார். இவர் இப்போட்டியில் ஆட்ட மிழக்காது 112 ஓட்டங்களைப் பெற் றுக்கொண்ட அதேவேளை 24 ஓட் டங்களை விட்டுக்கொடுத்து 4 விக் கெற்றுக்களையும் கைப்பற்றியிருந் தமை குறிப்பிடத்தக்கதாகும்.

(தி-68)

# விளையாட்டுச் செய்திகள்

*ஒருநாள் சர்வதேச கிரிக்கெந் போட்டியில்*

# சிம்பாவே வேகப்பந்து வீச்சாளர் வெஜ் பேட்ரேய்க் பங்குபற்றார்

சிம்பாவே கிரிக்கெற் அணிக்கெதி ராக நடைபெறவுள்ள கடைசி 2 ஒருநாள் சர்வதேச கிரிக்கெற் போட் டிகளுக்கென பெயரிடப்பட்டுள்ள 12 பேர் கொண்ட மேற்கிந்திய தீவுகள் கிரிக்கெற் அணியில், வேகப்பந்து வீச்சாளரான வெஜ்பேட் ரேய்க் சேர்த் துக் கொள்ளப்படவில்லை.

உபாதைக்கு உள்ளாகியிருப்ப தனாலேயே அணியில் சேர்த்துக் கொள்ளபபடவில்லையென மேற்கிந் திய தீவுகள் அணியின் கிரிக்கெற் தேர்வாளர்கள் தெரிவித்துள்ளனர். இவருக்குப் பதிலாக அணியில் விளையாட ரெவிரம்போல் அல்லது பிடெல் எட்வேட்டிற்கு சந்தர்ப்பம் வழங்கப்படலாம் எனத் தெரிவிக்கப் படுகின்றது.

சிம்பாவே மற்றும் மேற்கிந்தியத் தீவுகள் கிரிக்கெற் அணிகளுக்கிடை யில் 5 ஒருநாள் சர்வதேச கிரிக்கெற் போட்டிகளில் முதல் 3போட்டிகள் முடிவடைந்த நிலையில் சிம்பாவே அணி 2:1என்ற ஆட்டக்கணக்கில் வெற்றி பெற்று முனனணியில் திகழ கின்றது. மேற்கிந்தியத் தீவுகள் அணி தொடரை வெல்ல வேண்டு மாயின் கடைசியாக இடம்பெற விருக்கும் இரு போடடிகளிலும் சிம் பாவே வெல்லவேண்டிய நிலையில் இருக்கின்றது.

(தி-68)

# ஆஸியின் முன்னாள் பந்துவீச்சாளர் இந்திய அணிக்கு பந்து வீச்சுப் பயிற்சி

இந்திய கிரிக்கெற் அணியின் பந்து வச்சுப் பயிற்சியாளராக அவுஸ் திரேலிய கிரிக்கெற் அணியின் முன்னாள் பந்து வீச்சாளர் புறூஸ் வெல் நியமிக்கப்பட்டுள்ளார். இந் திய கிரிக்கெற் அணி 4 டெஸ்ட் போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொட ரில் அவுஸ்திரேலியாவுடன் விளை யாடுவதற்காக அங்கு கிரிக்கெற் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள் ளது.

இவ் டெஸ்ட் போட்டித் தொடரில் பங்குபற்றவுள்ள இந்திய கிரிக்கெற் அணியின் வேகப்பந்து வீச்சாளர் களுக்கு பந்து வீச்சுப் பயிற்சி வழங் குவதற்காகவே புறூஸ்வைல் நிய மிக்கப்பட்டுள்ளதாக இந்தியக் கிரிக் கெற் வாரியம் அறிவித்துள்ளது.

இந்திய கிரிக்கெற் வாரியத்தின் செயற்குழுக் கூட்டம் நேற்று முன்தி னம் டெல்லியில் நடைபெற்றபோதே இந்த நியமனம் பற்றி இந்திய கிரிக் கெற் வாரியத் தலைவர் ஜஸ்மோகன் டால்மியா ஊடகவியலாளர்களிடம் தெரிவித்தார்.

இதேவேளை, லஞ்ச ஊழல் குற் றம் சாட்டப்பட்டுள்ள அபிஜித்காலே மீதான அடுத்த கட்ட நடவடிக்கை பற்றி ஊடகவியலாளர் கேள்விக்கு டால்மியா பதிலளிக்கையில், விசார ணைக் கமிஷன் அறிக்கைக்குப் பின்னர் முடிவுசெய்ய கிரிக்கெட் வாரியம் தீர்மானித்திருப்பதாகவும் தெரிவித்திருந்தார்.

மேலும், அவுஸ்திரேலியா, பாகிஸ் தான் மற்றும் இந்தியா ஆகிய நாடு கள் பங்குபற்றும் ஒருநாள் சர்வ தேச போட்டித் தொடர் ஒன்றினை அடுத்த ஆண்டு ஐரோப்பிய நாடு ஒன்றில் நடத்தத் திட்டமிட்டிருப்பதா கவும் அவர் தெரிவித்தார்.

இங்கிலாந்து அணிக்கெதிராக மூன்று ஒருநாள் சர்வதேசப் போட்டி கள் கொண்ட ஒருநாள் போட்டித் தொடர் ஒன்றினையும் அடுத்த ஆண்டு செப்ரெம்பர் மாதத்தில் நடத் தத் திட்டமிட்டுள்ளதுடன், அடுத்த ஆண்டில் இங்கிலாந்தில் நடைபெற வுள்ள சர்வதேசக் கிரிக்கெற் சம்மே ளனச் சம்பியன் கிண்ணப் போட்டி களுக்கு முன்பாக இம் மூன்று நாடு கள் பங்குபற்றும் மும்முனை ஒரு நாள் சர்வதேச போட்டித்தொடரை ஐரோப்பிய நாடு ஒன்றில் நடத்தத் திட்டமிட்டுள்ளதாகவும், இப் போட் டித் தொடர்களுக்கான மைதானங் களும், போட்டித் திகதிகளும் பின் னர் அறிவிக்கப்படும் எனவும் அவர் தெரிவித்திருந்தார். (தி-68)



குயின்ஸ்லாந்து வீரர் வீசிய பந்தில் இருந்து தன்னைப் பாதுகாத்துக் கொள்ளும் இந்திய கிரிக்கெற் வீரர் லஷ்மன்.

# டேவிஸ் கிண்ணத்தை ஆஸி.அணி கைப்பற்றியது

டெனிஸ் போட்களில் பாரம்பரி யம் மிக்க டேவிஸ் கிண்ண டெனிஸ சுற்றுப்போட்டியினை அவுஸ்திரே லிய அணி இம்முறையும் கைப்பற றியுள்ளது.

அவுஸ்திரேலிய மெல்போன் நகர் டெனிஸ் அரங்கில் நடைபெற்று வந்த இப் போட்டியை அவுஸ்தி ரேலியா வெற்றிகொண்டதன் மூலம் 28வது தடவையாகவும் டேவிஸ் கிண்ணத்தை கைப்பற்றிய பெரு மையை பெற்றுள்ளது.

இறுதிப் போட்டியில் அவுஸ்தி ரேலிய அணிக்கும், ஸ்பெயின் அணிக் குமிடையில் 5 ஆட்டங்கள் கொண்ட போட்டியாக நடைபெற்றன. நேற்று முன்தினம் வரை நடைபெற்ற 3 போட்டிகளின் படி அவுஸ்திரேலிய அணி 2:1என்ற புள்ளிகளைப் பெற்று முன்னணியில் இருந்தது. இதில் ஒற் றையர் போட்டி ஒன்றிலும், இரட்டை யர் போட்டி ஒன்றிலுமாக அவுஸ்தி ரேலிய அணி தனது 2வெற்றி களைப் பெற்றிருந்தது.

எஞ்சியிருந்த 2போட்டிகளில்4 ஆவது போட்டியில் அவுஸ்திரேலிய வீரரான மார்க் பிலிப்போஸஸ், ஸ்பெயின் வீரரான ஹார்லுஸ் பெரே ராவை ஒற்றையர் போட்டியில் எதிர்கொண்டு வெற்றி கொண்டதன் மூலம் அவுஸ்திரேலிய அணியின் டேவிஸ் கிண்ண வெற்றி உறுதி செய்யப்பட்டது.

இதனை அடுத்து 82 ஆண்டு கால பாரம்பரியம் மிக்க டேவிஸ் கிண்ண டெனிஸ் போட்டியில் 28வது தடவையாக டேவிஸ் கோப் பையை அவுஸ்திரேலியா கைப்பற றிக்கொண்டுள்ளது. அவுஸ்திரேலிய அணியின் வெற்றி உறுதியானதை அடுத்து 5ஆவதும் இறுதியுமான போட்டி கைவிடப்பட்டது. (தி-68)

## செயற்குழு தெரிவு

(பருத்தித்துறை)

அல்வாய் தெற்குகிராம அபிவிருத்திச் சங்கத்தலைவராக என்.கண்ணதாசன் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

உப தலைவராக எஸ்.செகராஜசிங்கமும் செயலாளராக எஸ்.கே.இராசேந்திரமும், உப செயலாளராக என்.ரவீந்திரனும் பொருளாளராக ரீ.பாலசுப்பிரமணியமும் தெரிவு செய்யப்பட்டனர்.

அத்துடன் 8பேர் கொண்ட செயற் குழுவும் தெரிவு செய்யப்பட்டது. (தி-52)

## வழக்கு ஒத்திவைப்பு

(கொழும்பு)

கிருஷாந்தி குமாரசாமி கொலை வழக்கில் மரணதண்டனை விதிக்கப்பட்ட 5 இராணுவ வீரர்களும், தாக்கல் செய்த மேன்முறையீட்டு மனு சம்பந்தமான தீர்ப்பை வழங்குவதற்கான திகதி எதுவும் குறிப்பிடாது உயர் நீதிமன்றம் வழககை பின் தள்ளி வைத்துள்ளது.

மனுதாரர்களும், மனுதாரர்களுக்கு எதிராக சாட்சியமளித்தவர்களும், தங்களது எழுத்து மூலமான ஆவணங்களுடன் எதிர்வரும் டிசம்பர் மாதம 19ஆம் திகதி சமுகமளிக்க வேண்டும் எனவும் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

மனுதாரர்கள் சமர்ப்பித்தமேன்முறையீட்டில், தமக்கு விதிக்கப்பட்டுள்ள மரண தண்டனை நாட்டின் சட்ட வழிமுறைகளுக்கு உட்பட்ட வகையில் அமைந்திருக்கவில்லை என குறிப்பிடப்பட்டுள்ளது.(தி-60,10)

## ஹெரோயின் பறிமுதல்

(சென்னை)

மும்பாயில் இருந்து இலங்கைக்கு கடத்துவதற்காக இலங்கை நபர் வைத்திருந்த ஒரு கோடி பெறுமதியான சுமார் ஆயிரத்து 500 கிலோக் கிராம் ஹெரோயின் போதைப் பொருளை திருச்சிப் பொலிஸார் பறிமுதல் செய்துள்ளனர்.

திருச்சியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இச் சம்பவம் தொடர்பாக பொலிஸார் தொடர்ந்தும் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனா. (தி-10)

# வீதி விபத்துக்களைத் தடுப்பதற்கு பொதுமக்கள் ஒத்துழைக்க வேண்டும்

## பலாலிப் பாதுகாப்பு நடவடிக்கைத் தலைமையகம் அறிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம்-கண்டிஏ-9வீதி புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டதன் பின் திறந்து வைக்கப்பட்டதனால் ஏராளமான வாகனங்கள் யாழ்ப்பாணத்தை வந்தடைகின்றன. நாளொன்றுக்கு அதிகளவான மக்கள் தமது அன்றாடத் தேவைகளுக்காக நகரை வந்து சேருவதினாலும் வாகன நெருக்கடி ஏற்படுவதனாலும் பல்வேறு சிரமங்கள் ஏற்படுவது தடுக்க முடியாததொன்றாகி விடுகிறது.

குறிப்பாக அண்மைக் காலத்திலிருந்து யாழ். நகரில் முச்சக்கர வண்டிகளும் மோட்டார் சைக்கிள்களும் அதிக அளவில் பாவனையில் காணப்படுகின்றன. எனினும் இவ்வண்டிகளை ஓட்டும் ஓட்டுநர்கள்பலர் சாரதி அனுமதிப்பத்திரமின்றி ஓட்டுவதை அறியக் கூடியதாக இருக்கின்றது.

அபிவிருத்திப் பணிகளுக்காக வீதிகளை இரு மருங்கில் தோண்டுவதாலும் மற்றும் ஒடுங்கிய வீதிகளும், செப்பனிடாத தெருக்களும் வீதிவிபத்துக்கள் நிகழ்வதற்கு வாய்ப்பாக அமைந்து விடுகின்றன. இக்காரணங்களில் தான் யாழ்ப்பாணத்தில் வீதி விபத்துக்கள் அதிகமாக இடம் பெற்றுள்ளதாக பொலிஸ் அறிக்கைகள் கூறுகின்றன.

மேலும் வாகனங்களைப் பயன்படுத்தும் அனேகமானோர் போக்குவரத்துச் சட்ட திட்டங்களைச் சரியான முறையில் பின்பற்றாமை விபத்துக்கள் அதிகரிப்பதற்கு மற்றுமோர் காரணமாகும். அதேவேளை சாரதிகள் மிகவும் வேகமாக வாகனங்களை ஓட்டிச் செல்ல முயற்சிக்கின்றனர்.

வாகன விபத்துக்கள் இன்று எமது நாட்டின் சாலைப் பகுதிகளிலும் இடம்பெறும் துரதிஷ்டமான சம்பவமாகும். விபத்துக்கள் ஏற்பட்டவுடன், அதனுடன் சம்பந்தப்பட்டவர்களை நீதியின் முன் நிறுத்துவது பொலிஸாரின் பொறுப்பாகும். குற்றவாளி இனம்காணப்பட்டு தண்டனை வழங்க வேண்டியது நீதி மன்றத்தின் கடமையாகும். இதனைப் பொது மக்கள் தமது கையில் கொண்டு செயல்படுவதால் தேவையற்ற பிரச்சினைகள் உருவாக வழிவகுக்கும். எந்தவொரு விபத்தும் வேண்டுமென்று நடைபெறுவதில்லை. அது சடுதியாகவும் எதிர்பாராத வகையிலும் இடம்பெறும் சம்பவமாகும். ஆனால் அவ்விபத்து யாரால் ஏற்பட்டது என்பதைத் தெளிவாக உணராமல் ஆத்திரத்தால் நடந்ததை அறியாமல் செயல்படத் துடிப்பதும், செயல்படுவதும் விரும்பத்தக்கதல்ல.

மேலும அண்மையில் இராணுவச் சிப்பாய் ஒருவரை பஸ் வண்டி மோதியதன் காரணமாக அந்த இராணுவச்சிப்பாய் காயமடைந்தார். அவர் கோபமடைந்து பஸ் வண்டிக்கோ அல்லது பஸ்வண்டியின் சாரதிக்கோ எதுவித சேதத்தையும் விளைவிக்கவில்லை.

போக்குவரத்து நியதிகளை எல்லோரும் அறிந்திருத்தல் வேண்டும். இவற்றைப் பாடசாலை மாணவ மாணவிகளுக்கும் அவர்களின் பெற்றோர்களுக்கும் எடுத்துரைத்தல் வேண்டும். இதற்காகப் பொலிஸ் போக்குவரத்துப் பகுதியையும் ஏனைய நிறுவனங்களின் உதவீயையும் பெற்றுக்கொளளலாம். வாகனமொன்றைச் செலுத்துவதற்கான ஆற்றல் பெற்று இருந்தாலும் அதை ஓட்டுவதற்கு முயற்சிக்காதீர்கள். அதற்குத் தேவையான தகைமைகளையும், சாரதி அனுமதிப் பத்திரத்தையும் கட்டாயம் பெற்றிருத்தல் வேண்டும். நன்றாக பயிற்சிபெற்று சாரதி அனுமதிப்பத்திரத்தைப் பெறுவதனால் வீதி விபத்துக்களைக் குறைக்க முடியும்.


விபத்தொன்று ஏற்பட்டதன் பின்பு சட்டத்தைச் செயல்படுத்தப் பொலிஸாருக்கு உதவுவது படையினரது கடமையாகும். அந்தச் சந்தர்ப்பத்தில் பொதுமக்கள் கலவரத்தை உண்டு பண்ணி கோபத்துடன் செயல்படக் கூடாது. குற்றமிழைத்தவர்களுக்குச் சட்டப்படி தண்டனை வழங்கப்படும் சூழ்ய மடைந்து செயல்படுவதன் மூலம் விபத்து யாரினால் ஏற்பட்டது என்பதைத் தெரிந்துகொள்ள முடியாது.


இதனால் பாதிக்கப்பட்டவர்களை அடையாளம் கண்டு அவர்களுக்குப் பெற்றுக்கொடுக்க வேண்டிய நஷ்ட ஈடு, அல்லது வேறு ஏதாவது உதவிகளை வழங்க முடியாமல் போய்விடும். ஆகையால் விபத்து ஏதாவது ஏற்பட்டவுடன் அது சம்பந்தமாகப் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்து அமைதியாக செயல்படுவதால் சட்டத்தை நிலைநாட்ட வசதியாக இருக்கும்.

கடந்த சில மாதங்களின் முன்னர் யாழ்ப்பாணம் மடத்தடியில் இடம் பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் உயிரிழந்த இளைஞர்கள் இருவரின் மரணம் குறித்து உண்மையிலேயே இராணுவத்தினர் கவலையடைந்துள்ளனர்.

இருப்பினும் பாதுகாப்பு படையினரின் தவறினால் ஏதாவது வாகன விபத்து இடம்பெற்றால் அவர்களுக்கு எதிராக இராணுவத் தலைமையகமும், பொலிஸாரும் கண்டிப்புடன் செயல்படுவர். இனிவரும் நாட்களில் அவ்வாறான விபத்துகள் இடம்பெறுவதையும் தடுக்க திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன.

இதேவேளை சாரதிகள் திறப்பை கையில் எடுத்தவுடன் வாகனத்தைச் செலுத்த முயற்சிக்கக் கூடாது. பயணத்தை ஆரம்பக்க முன்னர் வாகனம் போக்குவரத்திற்குத் தகுதியாக உள்ளதா? என்பதை நன்கு அவதானிக்க வேண்டும். அதிக வேகம், கவலையீனம், மதுவருந்தி போதையில் வாகனத்தை செலுத்துவது, வீதி ஒழுங்கை அலட்சியப்படுத்துவது போன்ற காரணத்தினால் வீதி விபத்துகள் அதிகமாக ஏற்படுகின்றன. எனவே வீதிவிபத்துக்கள் ஏற்படுவதைத் தடுக்க அனைவரும் ஒன்றிணைந்து செயற்படுவோம்.







நாவாந்துறை வசந்தபுரப் பகுதியில் 51வது படையணிப் பிரிவினர் ஒன்றரைக் கிலோமீற்றர் நிலப்பகுதியை இந்து கலாசார விவகார அமைச்சர் தி.மகேஸ்வரனிடம் நேற்றுக் கையளித்த போது எடுக்கப்பட்ட படங்கள். (படங்கள்:- டொரிங்ரன்)

# குடாநாட்டுப் புத்தி ஜீவிகள் முகமன் பேசுவதை தவிர்க்க வேண்டும்

## கோப்பாய் பயிற்சிக் கலாசாலை விரிவுரையாளர்வே. குமாரசாமி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணக் குடாநாட்டில் புத்தி ஜீவிகள் மற்றும் படைப்பாளிகள் மட்டத்தில் இன்று முகமனுக்காகப் பேசுவதும் எழுதுகின்றதுமான நிலையே வழக்கமாகிவிட்டது. நல்லதைக் காட்டவும், நல்லதைப் பேசவும், நல்லதை எழுதவும் எமக்கு திராணி வரவேண்டும். நாம் எமது பலத்தையும், பலவீனத்தையும் சரியான வகையிலே எடைபோடவேண்டும்.

இவ்வாறு பிரபல கவிஞரும், கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையின் விரிவுரையாளருமான வே.குமாரசாமி யாழ். செயலக மண்டபத்தில் கடந்த ஞாயிறன்று இடம் பெற்ற தேடல் இலக்கிய ஆய்வு மன்றத்தின் ஆலோசனைக் கூட்டத்தில் கருத்துரையாற்றும்போது தெரிவித்தார்.

யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் செ.பத்மநாதன் தலைமையில் இடம்பெற்ற இவ் ஆலோசனைக் கூட்டத்தில், தினகரன் பத்திரிகையின் மறைந்த ஆசிரியர் இ.சிவகுருநாதன், கலைப்பேரரசு எ.ரி.பொன்னுத்துரை, கலைஞர் வீரமணிஐயர் ஆகியோரின் மறைவுக்கு இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

வே.குமாரசாமி அங்கு தொடர்ந்து பேசுகையில்,

அண்மையில் கோப்பாய் கலாசாலையில் ஒரு நூல் வெளியீட்டு விழா இடம்பெற்றது. அந்த நூலில் குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய விடயங்கள் எதுவுமே இடம்பெறவில்லை. ஆயினும், அந்த விழாவில் உரையாற்றிய பேராசிரியர் ஒருவர் அந்தப் புத்தகம் பற்றி இல்லாதவை எல்லாவற்றையும் முகமனுக்காகப் புகழ்ந்து தள்ளினார். அதேபோல வேறு ஒரு படைப்பாளி அவரது முன்னுரையில் ஏதோவெல்லாம் புகழ்ந்து எழுதியிருந்தார்.

உண்மையிலே இவ்வகையான போக்குகள் ஏற்றுக்கொள்ளப்படக் கூடாது. நாம் எமது மொழியைச் சரியான முறைப்படி மாணவர்களுக்குப் பாடசாலைகளில் கொடுக்க வேண்டும். பட்டமளிப்பைப் பெறுகின்ற மாணவர்களால் கூட எமது மொழியைச் சரியாக எழுதவோ அல்லது புரிந்துகொள்ளவோ முடியாத நிலையே காணப்படுகின்றது என்றார்.

வலி. வடக்கு பிரதேச செயலரும், பிரபல நாவலாசிரியருமான கலாநிதி க.குணராஜா அங்கு கருத்துரை வழங்கும்போது, 75 வருட கால ஈழத்து இலக்கிய வரலாற்றில், ஈழத்து இலக்கிய வளர்ச்சி பற்றி யாருமே இதுவரை எழுதவில்லை. இலக்கிய வளர்ச்சியைச் சரியாக நாம் அடையாளம் காண வேண்டும். இலக்கிய ஆய்வில் ஸ்தாபன ரீதியான தேடல் மாத்திரம் போதாது. தனிமனிதர்களையும் இணைத்துக்கொள்ள வேண்டும். இந்த வகையில், தேடல் இலக்கிய ஆய்வுமன்றம் அகலக்கால்களை வைக்காது நிதானத்துடன் அதன் பணிகளை முன்னெடுக்க வேண்டும். இலக்கிய உலகில் இவ்வகையிலான முயற்சி பாராட்டப்பட வேண்டியது என்றார்.

இக்கூட்டத்தில், கலாநிதி எஸ்.சிவலிங்கராஜா, கல்ாநிதி திருமதி சுபதினி ரமேஷ், எழுத்தாளர் செ.யோகநாதன் ஆகியோரும் கருத்துரை வழங்கினர். (தி-16)

# நாவாந்துறையின் ஒருபகுதி அமைச்சரிடம் கையளிப்பு

(திருநெல்வேலி)

நாவாந்துறைப் பகுதியில் மக்கள் மீளக்குடியேறுவதற்கு யாழ். மாவட்ட பாதுகாப்பு நடவடிக்கைத் தலைமையகக் கட்டளை அதிகாரி மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகா அனுமதியளித்ததை அடுத்து, அப் பகுதியில் ஒன்றரைக் கிலோமீற்றர் நிலப்பகுதி 51வது படையணியைச் சேர்நத உபாலியினால் நேற்று இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரனிடம் கையளிக்கப்பட்டது.

நாவாந்துறைப் பகுதியில் மக்களை மீளக் குடியேற்றுவதற்காக கடந்த வெள்ளியன்று இராணுவத் தளபதி லயனல் பலக்கல்லவுடனான அமைச்சர் தி.மகேஸ்வரனின் சந்திப்பை அடுத்து, மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகா மேற்படி பகுதியில் ஒன்றரைக் கிலோமீற்றர் நிலப்பகுதியை மக்கள் மீளக் குடியேறுதற்கு அனுமதியளித்தார். இதனை அடுத்தே நேற்றைய தினம் அப்பகுதி கையளிக்கப்பட்டது.

இது தொடர்பாக அமைச்சர் மகேஸ்வரன் கருத்துத் தெரிவிக்கையில், இராணுவத்தால் தற்போது நாவாந்துறைப் பகுதியில் கையளிக்கப்பட்டுள்ள இந்நிலப் பகுதியில் சுமார் 400 குடும்பங்கள் மீளக்குடியேறுவதற்குச் சாத்தியம் உண்டு.

இதுபோலவே அடுத்தகட்டமாக குருநகர்ப் பகுதியில் 5 மாடிக் கட்டடம் உட்பட மக்கள் மீளக்குடியேறுவதற்கு ஏற்ற பகுதிகளை படையினரிடம் இருந்து விடுவித்து, அப் பகுதிகளில் மக்கள் மீளக்குடியேறும் வகையில் உரிய நடவடிக்கைகளை தாம் மேற்கொள்வதாகக் குறிப்பிட்டுள்ளார்.

(தி-16,43)

# மகாவம்சம்

## தரும் இலங்கை வரலாறு

கலாநிதி க.குணராசா
(செங்கை ஆழியான்)

30 ''தன் மகன் துட்டகாமினியின் புகழால், தன் புகழ் துலங்காது போன துர்பாக்கிய சாலி, காக்கவண்ணதீசன்'' என வரலாற்றாசிரியர்கள் கணிப்பர். காக்கவண்ணதீசன் தன் காலத்தில் மேற்கொண்ட நடவடிக்கைகள் துட்டகாமினியின் வெற்றியை இலவாக்கின எனலாம். யுத்தத்தில் வெற்றியைப் பெறுவதற்காகத் துட்டகாமினி கையாண்ட தந்திரங்கள் ஏற்புடையனவல்ல. தனது தயாரான விகாரை தேவியை அம்பதீர்த்தன் படைத் தளபதி தித்தம்பனின் முன் பார்வைக்கு நிறுத்தியதோடு, அவனுடான தாயின் திருமணத்திற்கும் அரசியல் இலாபம் கருதிய துட்டகாமினியின் சம்மதம் இருந்துள்ளது. மகாவலிகங்கை மருங்கே எல்லாளனின் இராணுவத்தளங்கள் இருந்தன. மகியங்கனை, அம்பதீர்த்தம், சர்ப்பக்கோட்டை, அந்தரசொப்பம், நாளிசொப்பம், கச்சதீர்த்தம், கொத்த நகரம், நந்திக் கிராமம்,விஜிதபுரம் முதலான தமிழரின் படையணிகளைத் தன் படைவலிமையாலும், தந்திர உபாயங்களாலும், துட்டகாமினி வெற்றி கொண்டான். காசா பர்வத்தில் பாசறை அமைத்துத் தங்குவதற்குக் காரணம், உருகுணையில் இருந்து படை புறப்பட்டு ஓராண்டா கியதும், படைக்குப் பலத்த அழிவுகள் ஏற்பட்டமையால் வீரர்களுக்கு ஓய்வு அளிக்கவும், உருகுணையில் இருந்து ஆளணிபெறவும் உணவுப்பொருட்களை பெறவுமாம்.

எல்லாளனைத் துட்டகாமினி தனிச் சமருக்கு அழைத்த சவாலை எல்லாளன் ஏற்றதன் மூலம் பெருந்தவறு செய்தான். எல்லாளன் 72 வயதுடைய முதியவன். துட்டகாமினியோ இளைஞன். ''தனது தனிப்பட்ட வீரம், வெற்றி என்பனவற்றுடன், தமிழ் ஈழக் குடிமக்களின் வீரம், வெற்றி, நல்வாழ்வு என்பனவற்றைத் தொடர்படுத்தியமையால், எல்லாளனின் தனிச்சமர் தமிழ் ஈழ மக்களின் தோல்வியாயிற்று'' என திருச்செல்வம் குறிப்பிடுவார். (திருச்செல்வம். மு.-1977).

தனிச்சமருக்கு விடுத்த அழைப்பை ஏற்காது விடுவது அரச தர்மத்திற்கு முரண் என எல்லாளன் கருதி இருக்க முடியும்.

துட்டகாமினியின் விடுதலை வேட்கையைக் குறைத்தோ, தவறாகவோ, மதிப்பிடமுடியாது. அனுராதபுர சிம்மாசனத்தில் சிங்களவரும் தமிழரும் மாறிமாறி அமர்ந்து ஆட்சி புரிந்துள்ள்னர். ஆட்சியாளர் தமது ஆதிபத்தியத்தை விரிவாக்கவும் அதிகாரத்தை நிலைநாட்டவும் விரும்புவது இயல்பே. அனுராபுர சிம்மாசனத்தில் அமர்வதற்கு துட்டகாமினி விரும்பியதில் எதுவித குறையுமில்லை ஆட்சியில் அமர சிங்கள மன்னர்களும் தமிழ் மன்னர்களும் மோதிக் கொண்டனர். மக்கள் இரு திறத்தாரது ஆட்சியையும் ஏற்றிக் கொண்டனர். தன்திறத்தால் ஆளும் போது மகிழ்வும், மறுதிறத்தார் ஆளும்போது சகிப்புத் தன்மையும் இருந்திருக்கவேண்டும்.

துட்டகாமினி, எல்லாளனின் மரணத்தின் பின்னர் அவனுடைய பூதவுடலுக்கு அளித்த கௌரவம் குறிப்பிடத்தக்கது. எல்லாளன் வீழ்ந்திறந்த விடத்தில் சேத்தியம் ஒன்றினைக் கட்டி, ''எந்த மனிதனாயினும் அவன் இளவரசனாக இருந்தாலும் சரி சாதாரண குடிமகனாக இருந்தாலும் சரி, இந்த வழியாகச் சிவிகையிலோ, மூடுபல்லக்கிலோ வர நேர்ந்தால் வாத்தியவொலி எழுப்பக் கூடாது'' என கற்றூணில் பொறித்து வைத்துள்ளான். மகாவம்ச ஆசிரியரும் எல்லாளனின் நீதி நெறி தவறாத ஆட்சியைப் புகழ்ந்துள்ளார். எல்லாளனின் சில படைவீரர்கள் அல்லது இனத்துவேசம் கொண்டு சில தமிழ் குடிகள் அனுராதபுரத்தில் சேத்தியங்களுக்கும் சமயச் சின்னங்களுக்கும் இழைந்த தீங்குகளையும் அவர் குறிப்பிடாது விடவில்லை.

''தமிழர்கள் சைத்தியங்களுக்கு விளைவிற்கின்ற கொடுமைகளைத் தாங்க முடியாத நநதிமித்திரன் என்ற மல்லன் அனுராதபுரத்தை விட்டு ஓடிச்சென்றதாக மகாவம்சம் கூறுகிறது. தானறியாது தவறுதலாக சைத்தியத்திற்கு நிகழ்ந்த பாதிப்பிற்குத் தன் சுயவிருப்பத்தின் பேரிலே தண்டனையைப் பெற்றுக் கொள்ள முன்வந்த எல்லாள மன்னரோ, அவரது பௌவுத்த அமைச்சர்களோ ஏனைய தமிழர்கள் சைத்தியங்களை நிந்தனை செய்வதற்கு இடமளித்து வாளாவிருந்திருப்பார்கள் என்பது ஏற்றுக்கொள்ள முடியாத கூற்றாகும். இது உருகுணை யில் வசிக்கின்ற பௌத்த மக்களை எல் லாள



மன்னருக்கு எதிராக அணிதிரள வைப்பதற்குத் துட்டகாமினியால் கோர்த்துக் கட்டப்பட்ட கட்டுக்கதையாகும். இவ் விராட்சியத்தில் எல்லாள மன்னருக்குச் சார்பாகத் தமிழ்மக்களும் சிங்கள மக்களும் நெருங்கி உறவாடும் போது, சிங்கள தேசியவாத யுத்த கோஷமொன்றை முன்வைப்பது பயனற்ற செயல் எனத் துட்டகாமினிக்குத் தோன்றி இருக்கலாம்'' என லயனல் சரத் என்பார் புராதன இலங்கையின் சிங்கள-தமிழ் உறவுகள் என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார்.

துட்டகாமினி எல்லாளனுக்கு எதிரான யுத்தத்திற்கு மதத்தை முன்வைத்தான் '' நான் அரச போகங்களுக்காக இந்த யுத்தத்தில் இறங்கவில்லை. பௌத்த சாசனத்தின் உன்னதத்திற்காக்வே போர் தொடுக்கின்றேன்'' என்ற கவர்ச்சிகரமான சுலோகத்தையும் முன்வைத்தான். உண்மையில் எல்லாளனுக்கு எதிராக சமய ரீதியாகவோ, இன ரீதியாகவோ எதிப்பு ஏற்பட எதுவித அடிப்படையும் இல்லை. எல்லாளன் போன்ற செங்கோல் அரசன் ஒருவனை வெற்றி கொள்வது இலகுவல்ல. அதனால்தான் மேற்படி சுலோகத்தையும், பௌத்த துறவிகளை படையுடன் அழைந்து வந்தும் போரை நடாத்தியுள்ளான். பௌத்த பிக்குகள் யுத்தமொன்றுடன் தொடர்புபடும் சம்பவம் வரலாற்றில் இதுவே முதல் தடவை என கும்புருகமூவே வாஜிரஹிமி குறிப்பிடுவார்.

(தொடரும்)

# யப்பானியத் தூதுவர் உடுகம தேரரை சந்திப்பு

(கொழும்பு)

இலங்கைக்கான யப்பானியத் தூதுவர் நேற்று முன்தினம் கண்டிக்குச் சென்று அஸ்கிரிய பீடாதிபதி அதி சங்கைக்குரிய உடுகம ஸ்ரீ புத்தரகித்த மகாநாயக்க தேரரைச் சந்தித்துப் பேசியுள்ளார்.

கண்டி தலதா மாளிகையில் இடம்பெற்ற இச் சந்திப்பில், சமாதான முயற்சிகளை முன்னெடுப்பதற்கு யப்பானிய அரசாங்கம் வழங்கிவரும் ஆதரவை தேரர் பாராட்டினார்.

அத்துடன், தற்போது தென்னிலங்கையில் ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடி மற்றும் சமாதான முயற்சிகள் குறித்தும் தூதுவர் தேரருடன் கலந்துரையாடினார். (தி-60)

# சேவைகள் வரியை அரசு நீக்க வேண்டும்

(கொழும்பு)

நிறுவனங்கள் மூலம் அறவிடுவதற்கு திட்டமிடப்பட்டுள்ள 'சேவைகள் வரியை' வரவு செலவுத் திட்டத்தில் இருந்து நீக்க் அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும் என எதிர்க் கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் எதிர்க் கட்சித தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற மத்திய மற்றும் சிறிய தொழில் நிறுவனப் பிரதிநிதிகள் கூட்டத்தில் உரையாற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

அரசாங்கம் அவ்வாறு சேவைகள் வரியை நீக்காவிட்டால், சிறிய மற்றும் மத்திய தொழில் நிறுவனங்களில் 60வீதம் பாதிப்படையும் மத்திய தரத்திலான சில்லறை வர்த்தகர்களும் இதன் மூலம் பாதிப்பை எதிர் நோக்குவார்கள்.

எனவே, 20 மில்லியனிற்கு மேற்பட்ட பெறுமதியான வர்த்தகத்துறைக்கு ஒரு சதவீத சேவைகள்வரி அறவிடும ஆலோசனை பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (தி-61,10)

# பல்கலையில் பனை - தென்னை வள பயிற்சி நெறி ஆரம்பம்

(பருத்தித்துறை)

யாழ்.பல்கலைக்கழக விவசாய பீடத்தினால் இம்மாதம் 12ஆம் திகதி பனை-தென்னை வள தொழில்நுட்ப பயிற்சி நெறி ஒன்று ஆரம்பிக்கப்படவுள்ளது.

இப்பயிற்சி நெறிக்காக வடமாகாணத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டு நேர்முகப பரீட்சை மூலம பயிற்சியாளர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தமிழ் மக்களின் மூலவளப் பயன்பாட்டில் ஏற்றுமதிப் பொருளாதார வளர்ச்சிக்குத் தடைக் கல்லாக இருக்கும் காரணிகள் தொழில்நுட்ப பயிற்சி நெறிமூலம் நீக்கப்படுமென எதிர்பார்க்கப் படுகின்றது.

(தி-52)

# சவுக்கு மரங்கள் தறிப்பதை தடுத்து நிறுத்தக் கோரிக்கை

(பருத்தித்துறை)

குடத்தனை மணற்காட்டுப் பிரதேசங்களில் உள்ள சவுக்கு மரங்கள் விறகுத் தேவைக்காக வெட்டப்படுவதை உடன் தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுக்குமாறு வடமராட்சி கிழக்கு சுற்றுச் சூழல் பாதுகாப்புச்சங்கம், வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபரைக் கேட்டுள்ளது.

வடமராட்சி கிழக்கு சுற்றுச் சூழல் பாதுகாப்புச் சங்கம் உதவி அரசாங்க அதிபருக்கு அனுப்பி வைத்துள்ள மகஜரிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

இம் மகஜரின் பிரதிகள் யாழ். அரச அதிபர் வன வள அபிவிருத்தித் திணைக்களம்•வடமராட்சிகிழக்கு புனரமைப்பு நிறுவனம், வல்வெட்டித்துறை கடற்புலிகளின் அரசியல் துறைப்பிரிவு, ஆகியவற்றுக்கும் அனுப்பப்பட்டுள்ளது. (தி-52)

## ஜனன தினம் அனுஷ்டிப்பு

(பருத்தித்துறை)

அன்னை ஸ்ரீசாரதாதேவியின் 150வது ஜனன தினம் எதிர்வரும் 16ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பருத்தித்துறை ஸ்ரீஇராமகிருஸ்ண சாரதா சேவாச்சிரமத்தில் சுவாமி சித்ரூபானந்தா தலைமையில் அனுஷ்டிக்கப்படவுள்ளது. (தி-52)

# தேசிய கல்வியியற் கல்லூரி...

(யாழ்ப்பாணம்)

தேசிய கல்வியியற் கல்லூரிகளில் 2004ஆம் ஆண்டு கல்வியாண்டுக்கு மாணவர்களை அனுமதிக்கும் பொருட்டிலான நேர்முகத் தேர்வுக்கு யாழ். மாவட்டத்தில் இருந்து அழைக்கப்பட்டவர்களின் பெயர் விபரங்கள் பாடநெறி ரீதியாக வருமாறு:-

### கணிதம்

சி.செந்தில்குகன் - புத்தூர் மேற்கு, ச.லோகிதா - அளவெட்டி வடக்கு, ந.பிரதீபன் - கரவெட்டி கிழக்கு, சு.சிவராமன் - ஏழாலை கிழக்கு, ரா.கிருபாஜினி - வட்டுமேற்கு, சி.தீபா - வடலியடைப்பு, நா.நயனா - கரணவாய் தெற்கு, த.லோஜிதா - சுன்னாகம், வி.பேரின்பநாயகி - மாதகல் கிழக்கு, ம.சுமணா - கரவெட்டி கிழக்கு.

த.மாதங்கி - புலோலி மேற்கு, செ.ஜேம்ஸ் ரவீந்திரகுமார் - தும்பளை, கு.சுபாஜினி - சுதுமலை வடக்கு, பூ.விஜிதா - சாவகச்சேரி வடக்கு, சு.ஜனகன் - யாழ்ப்பாணம், சு.கெநீஷன் - அச்சுவேலி தெற்கு, அ.நளாயினி - பருத்தித்துறை, கு.ராசதீபன் - புத்தூர், பா.பிரதீபன் - கரணவாய் வடக்கு, சி.சுபத்திரா - புலோலி தெற்கு.

உ.கண்மணி - மட்டுவில் தெற்கு, ஆ.யோகலிங்கம் - திருநெல்வேலி, கி.துவாரகா - கரவெட்டி மத்தி, த.பகீரதன் - சங்கத்தானை - க.திருவரங்கன் - திக்கம், பா.சஞ்சீவன் - வண்ணார்பண்ணை, ரா.நிமலன் - சரசாலை தெற்கு, சி.ராஜமலர் - காரைநகர், சீ.பிரசாத் - சண்டிலிப்பாய் வடக்கு, அ.சுரேஷ்குமார் - கொக்குவில் கிழக்கு.

க.பிரதீபன் - ஆவரங்கால், பா.முகுந்தன் - இமையாணன் கிழக்கு, ப.பாலமனோகரன் - [illegible] வேலி, ம்.வரவீணா - அளவெட்டி வடக்கு, ஜெ.ரதீசன் - யாழ்ப்பாணம், கி.அருள்நிதி - கொக்குவில் கிழக்கு, தா.தயாநிதி - உடுவில், ம.மதிராஜ் - கொடிகாமம், கி.கலைவாணி- இடைக்காடு, சி.பாலமுரளி - கரவெட்டி மத்தி.

ம.யசோதினி - உடுப்பிட்டி, க.சர்மிளி - சாவகச்சேரி, அ.கிருஸ்ணப்பிரியா - காரைநகர், வே.நிஷாந்தினி - சாவகச்சேரி, சி.நிஷாந்தன் - காங்கேசன்துறை, க.ஞானமாலா - ஆவரங்கால் மேற்கு, ஜீ.டயானா - யாழ்ப்பாணம், வி.முருகதாஸ் - அல்வாய் கிழக்கு, க.பிரதீப் - கரவெட்டி மத்தி, அ.காமிலா - கோண்டாவில் மேற்கு.

சி.ஸ்ரீராகுலன் - எழுதுமட்டுவாள் தெற்கு, சி.கமலகரன் - கைதடி மேற்கு, க.ஆதவன் - சுன்னாகம், து.கௌரிசங்கர் - காங்கேசன்துறை, ம.பாமினி - உடுவில், க.கஜனி - கரணவாய் தெற்கு, மு.ரமேஷ் கரவெட்டி கிழக்கு, க.உதயராசா - இணுவில், பா.ஜீபதனுசன் - சுண்டுக்குளி, ரா.ராஜீவ் - உசன்.

(முற்றும்)

பகச்சொல்லி கேளிர்ப் பிரிப்பர்
நகச்சொல்லி
நட்பாடல் தேற்றா தவர்
-குறள்-

# வலம்புரி

## கூட்டணிக்குள் குத்துவெட்டு

தமிழர் விடுதலைக் கூட்டணித்தலைவர் வீ.ஆனந்தசங்கரியைத் தலைமைப் பதவியில் இருந்து விலக்குவதற்கு கூட்டணிக்குள் பெருமுயற்சிகள் நடைபெற்று வந்தமை ஏற்கனவே தெரிந்த விடயம்.

இம் முயற்சியின் முற்றிய நிலையாக நேற்று முன்தினம் கூடிய கூட்டணியின் மத்திய குழுக்கூட்டம் பெரும் குழப்பங்கள், குழறுபடிகள் மத்தியில் முடிவடைந்துள்ளது.

தந்தை செல்வநாயகத்தால் கட்டிக்காக்கப்பட்ட தமிழர் விடுதலைக்கூட்டணி இன்று சந்தியில் நின்று சண்டை பிடிப்பதைப் பார்க்கும் போது மனம் குழப்பமடைகிறது.

எனினும் நல்லகாலம் தந்தை செல்வநாயகம் தப்பிவிட்டார் என்ற மனஆறுதலும் கூடவே ஏற்படுகிறது. அதேவேளை பாராளுமன்றத்தில் கூட்டணியினர் தமிழர்களுக்காகக் குரல் கொடுப்பார்கள் என்ற நம்பிக்கையோடு உதய சூரியனுக்குப் புள்ளடிபோட்டவர்கள் சம்பவத்தைக் கண்டு ஏங்கி விழிக்கின்றனர்.

ஒருகாலத்தில் தென்னிலங்கையிலுள்ள பிரதான கட்சிகளையே பாராளுமன்றத்தில் வைத்து கலக்கிய கூட்டணி இன்று கொழும்புத் தலைநகரில் தங்களுக்குள் தாங்கள் மோதிக்கொள்கிறார்கள் எனில் அந்தக்கட்சிக்குள் உள்ள உறுப்பினர்களின் தன்மை-அக்கட்சியின் தேய்மானம் போன்றவை வெளிப்படுகிறது.

இவ்வாறு தங்களுக்குள் மோதிக்கொள்பவர்களை சிங்களப் பொலிஸார் தடுத்து நிறுத்தி அவர்களுக்குப் புத்திமதி கூறுமளவில் கூட்டணியின் கௌரவம் கப்பல் ஏறியிருப்பதை எண்ணுகின்றபோது மானமுள்ள எந்த தமிழ்மகனுமே அதுபற்றிக் கவலை கொள்ளாமல் இருக்கமாட்டான்.

இவை ஒருபுறம்,மறுபுறத்தில் கூட்டணியின் மத்திய குழு கூட்டமுடிபுகள் குறித்து அக்கட்சியின் இரு பிரிவினர் வெளியிட்ட தகவல்கள் சிரிப்பையும், அதேவேளை ஆத்திரத்தையும் உண்டு பண்ணுகிறது.

கட்சித்தலைவர் ஆனந்தசங்கரி மீதான நம்பிக்கையில்லாப் பிரேரணை நிறைவேறி விட்டதென கூட்டணியின் செயலாளர் நாயகம் இரா. சம்பந்தன் அறிவிக்கின்ற அதேவேளை, மத்திய குழுக்கூட்டம் எந்த முடிபையும் எடுக்கமுடியாமல் ஒத்திவைக்கப்பட்டதென கட்சித் தலைவர் ஆனந்தசங்கரி தெரிவித்துள்ளார். நடந்ததோ கூட்டம். அறிவிக்கப்பட்ட முடிபுகளோ எதிரும் புதிருமானவை எனில் இவர்களா ஜனநாயகவாதிகள். கூட்டத்தில் நடந்த உண்மையை அறிவிக்க முடியாத இவர்களா தமிழ்மக்களுக்காகக் குரல் கொடுப்பவர்கள்!

இத்தகையவர்களின் தேவைப்பாடு என்ன என்பதுபற்றிய கேள்விகளோடு தமிழ் மக்கள் மௌனமாக இருக்கிறார்கள்.

# குழந்தைகளுக்கு ஏற்படும் இரத்த அழுத்தம்

# திருத்தமான முயற்சிகளால் சீராகும்

## மருத்துவ விளக்கம்

இரத்த அழுத்தம் ஒரு நோயாளிக்கு அதிகம் ஆகிவிட்டது என்றாலே நம் மனக் கண்ணில் ஒரு வயோதிபர் மட்டுமே தோன்றுகிறார். நாம் ஒரு குழந்தைக்கும் அதிக இரத்த அழுத்த நோய் வரலாம் என்பதை பெரும்பாலும் நினைததுப் பார்ப்பதில்லை. ஆம், குழந்தைகளும் அதிக இரத்த அழுத்த நோயினால் பாதிக்கப்படலாம் என்பதை மருத்துவ ரீதியான உண்மை! குறிப்பாகச் சொல்ல வேண்டும் என்றால் ஒரு நூறு குழந்தைகளைப் பரிசோதித்தால் இரண்டு குழந்தைகளுக்கு அதிக இரத்த அழுத்த நோய் இருப்பது தெரிய வரும். எனவே குழந்தைகள் தங்கள் பிற்கால வாழ்க்கையில் பின்விளைவுகளால் பாதிக்கப்படாமல் இருக்க ஆரம்பத்திலேயே அதிக இரத்த அழுத்த நோய் இருப்பதைக் கண்டு பிடித்துவிட்டால் மிகவும் நல்லது.

### காரணங்கள்

குழந்தைகள் பெரும்பாலும் **Secondary Hypertension** என்ற நோயினால் பாதிக்கப்படுகிறார்கள். அதாவது அவர்களுக்கு இரத்த அழுத்தம் அதிகமாக ஏதாவது ஒரு குறிப்பிட்ட காரணம் உடலில் காணப்படுகிறது. வயதானவர்களுக்கு வரும் இரத்த அழுத்த நோய் பெரும்பாலும் காரணமின்றி வருகிறது. அதாவது **Primary or Essemtial Hypertension** வகையைச் சார்ந்தது. இது ஒரு முக்கிய வித்தியாசம். சரி, இனி எந்தெந்தக் காரணங்களால் குழந்தைகள் பாதிக்கப்படுகிறார்கள் என்று பார்ப்போம்.

1) சிறுநீரகக் கோளாறுகள்
   a சிறுநீரகத்தில் கட்டி (சதை வளர்ச்சி)
   b சிறுநீரக இரதத்க் குழாய் சுருங்கி விடுவது (10%)
   c சிறுநீர் வழியில் அடைப்பு
2) இருதயத்தில் உள்ள கோளாறு
   a. இருதயத்தில் இருந்து புறப்படும் மிகப்பெரிய இரத்தக் குழாய் சுருங்கி இருப்பது.
3) நாளமில்லாச் சுரப்பிகளில் உள்ள குறைகள்
4) சில மருந்துகளால் இரத்த அழுத்தம் அதிகமாகலாம்.

### இரத்த அழுத்தம் அளக்கும் முறை

பெரியவர்களுக்கு உபயோகப்படுத்தப்படும் இரத்த அழுததக் கருவியை உபயோகித்தாலும் கையைச் சுற்றிக் கட்டப்படுகின்ற பகுதி (Cuff) குழந்தைகளுக்கு என்று வேறுவித அளவில் பிரத்தியேகமாக



உபயோகிக்கப்படவேண்டும். வயதானவர்களுக்கு உபயோகிக்கப்படும் **Cuff** உபயோகித்தால் இரத்த அழுத்தம் குறைவாகவே மதிப்பிடப்படும். விரிவாகச் சொல்ல வேண்டும் என்றால் குழந்தைகளின் கையில் மூன்றில் இரண்டு பாகம் இரத்த அழுத்தக் கருவியின் **Cuff** இருக்கவேண்டும்.

### அறிகுறிகள்

குழந்தைகளுக்கு அதிக இரத்த நோய் இருப்பதை எப்படித் தெரிந்து கொள்வது? பெரும்பாலான குழந்தைகள் எந்த அறிகுறியாலும் பாதிக்கப்படுவதில்லை. சில குழந்தைகள் மட்டும் கீழ்கண்ட அறிகுறிகளால் பாதிக்கப்படலாம்.

1) தலைவலி
2) வாந்தி எடுத்தல்
3) பசியின்மை
4) மயக்கம்
5) மூக்கிலிருந்து இரத்தம் வழிதல்
6) நெஞ்சில் படபடப்பு

ஒரு குழந்தை உண்மையிலேயே அதிக இரத்தநோயால் பாதிக்கப்படுகிறதா இல்லையா என்பதை ஒருமுறை இரத்த அழுத்தத்தைப் பரிசோதித்து விட்டு உடனே மருத்துவர்கள் ஒரு முடிவுக்கு வந்து விடமாட்டார்கள். மூன்று நாட்களுக்கு இரத்த அழுத்தத்தைப் பரிசோதித்துப் பார்த்துவிட்டுத்தான் ஒரு முடிவுக்கு மருத்துவர்கள் வருவார்கள். ஏனென்றால் இரத்த அழுத்தம் பல நிலைகளில் மாறுபடும். உதாரணமாக ஒரு குழந்தை பயப்படுவதாலும், அழுவதாலும் இரத்த அழுத்தம் மாறுபடலாம் அல்லவா!

காரணத்தை எப்படி அறிவது?

1) ஒரு குழந்தையின் இருதயத்தை கவனமாகப் பரிசோதிக்க வேண்டும்
2) இரத்த நாளத் துடிப்பின் அளவை உடலின் பல இடங்களிலும் பரிசோதித்துப் பார்க்கவேண்டும்.
3) இரத்த அழுத்த அளவை இரண்டு கைகளிலும் மட்டுமன்றி இரண்டு கால்களிலும் அளக்கவேண்டும்.
4) வயிற்றுப் பகுதியில் கட்டி இருக்கின்றதா என்று கவனமாகப் பரிசோதிக்க வேண்டும்.
5) வழக்கமாக சலப் பரிசோதனை, இரத்தப் பரிசோதனை **E.C.G.,X-Ray** எடுக்கப்பட வேண்டும்.
6) சில பிரத்தியேகமான பரிசோதனைகள் செய்தாகவேண்டும்.

**எந்தெந்த வயதில் எவ்வளவு இரத்த அழுத்தம் இருக்க வேண்டும் என்பதை பின்வரும் அட்டவணை காட்டுகிறது.**

| வயது | இருதயம் சுருங்கும் போது (Systolic) | இருதயம்விரியும் போது (Diastolic) |
|---|---|---|
| 1-3 மாதங்கள் | 70முதல் 80mm foHg | 45 முதல் 55mm foHg |
| 4-12 மாதங்கள் | 80முதல் 90mm foHg | 60 முதல் 70mm foHg |
| 1-8 வருடங்கள் | 90முதல் 100வரை mm foHg | 60 முதல் 70வரை |
| 9-16வருடங்கள் | 100முதல் 110வரை mm foHg | 60முதல் 70வரை mm foHg |

### சிகிச்சை முறை

இரத்த அழுத்தம் மிகச் சிறிய அளவில் அதாவது **10mm of Hg** அதிகமாக இருந்தால் மருந்து இல்லாமல் அதைக் கட்டுப்படுத்த முயற்சி செய்யலாம். விளக்கமாகச் சொல்லவேண்டும் என்றால் உடல் எடையைக் குறிப்பிட்ட அளவில் வைத்திருப்பது, அதிக அளவில் உணவில் உப்பு சேராமல் பார்த்துக் கொள்வது, சீரான உடற்பயிற்சி (கொஞ்சம் வயது வந்த குழந்தைகள் மட்டும் செய்யலாம்) இரத்த அழுத்தத்தை அதிகப்படுத்தக் கூடிய மருந்துகளைத் தவிர்ப்பது.

அதிக இரத்த அழுத்தம் உள்ள குழந்தைகளுக்கு நிச்சயமாக மருந்து தேவைபபடும். எந்த மருந்து, எந்த அளவில் கொடுக்க வேண்டும் என்பதை உங்கள் மருத்துவர் தீர்மானிப்பார். சில சமயங்களில் காரணங்களுக்கு ஏற்ப அறுவைச் சிகிச்சையும் செய்ய நேரிடலாம். உதாரணமாக சிறுநீரகத்தில் கட்டி இருந்தாலோ, அல்லது அதன் இரத்தக் குழாயில் அடைப்பு இருந்தாலோ, இருதய இரத்தக் குழாய் சுருங்கி இருந்தாலோ (**Coarctation of Aorta**) நாளம் இல்லாச் சுரப்பிகளில் குறைபாடுகள் இருந்தாலோ (**Phaeochromocytoma**) அறுவைச் சிகிச்சையால் இரத்த அழுத்தத்தை சரி செய்துவிடலாம்.

**P.பாஸ்கரன்**
**(M.D, F.R.S.T.M, M.R.S.H)**

### கருத்தில் கொள்ளவேண்டிய விடயங்கள்

1) குழந்தைகளுக்கு அதிக இரத்த அழுத்தம் காரணமின்றியும் வரலாம் (பெரியவர்களுக்கு வருவது போல்) ஆனால் இது மிகமிக அபூர்வம் 5% முதல் 10% வரை மட்டுமே இவ்வாறு குழந்தைகள் பாதிக்கப்படுகிறார்கள். இவ் வகைக் குழந்தைகள் தவறாமல் மருந்து உட்கொள்ள வேண்டிய அவசியம் ஏற்படலாம்.
2) பெரும்பாலான குழந்தைகளுக்கு வரும் அதிக இரத்தநோய் அறுவை சிகிச்சை முறையில் குணப்படுத்தி விடலாம்.*
3) அதிக இரத்த நோயால் அவதிப்படுகின்ற பெற்றோர்களுக்குப் பிறக்கும் குழந்தைகள் 30% உயர் இரத்த அழுத்த நோயால் பாதிக்கப்படலாம் என்று மருத்துவ ஆய்வு தெரிவிக்கிறது.
4) ஓர் அறிகுறியும் இல்லாமல் குழந்தைகளுக்கு அதிக இரத்த அழுத்த நோய் இருக்கலாம் என்பதை நினைவில் கொள்ள வேண்டும். இந்த வகை குழந்தைகளுக்குள்ள நோயைக் கண்டுபிடிப்பது மருத்துவர்களின் மிகப்பெரிய பொறுப்பாகும்.
5) "குழந்தை தானே, பாவம் சாப்பிட்டுவிட்டுப் போகிறது" என்ற மனோபாவம் பல பெற்றோர்களிடம் காணப்படுகிறது. மருத்துவர்கள் குழந்தையின் உணவில் உப்பு அளவைக் குறைக்க வேண்டும் என்றால் கட்டாயம் பெற்றோர்கள் அதைக் கடைப்பிடிக்க வேண்டும்.
6) சீரான உடற்பயிற்சியின் முக்கியத்துவத்தைப் பெற்றோர்கள் குழந்தைகளுக்குக் கற்றுத்தர வேண்டும்.

அழுத்தம் திருத்தமான முயற்சி இரத்த அழுதத்தை திருத்துகிறது!! இதைவிட அழுத்தமாகச் சொல்ல வேண்டுமா என்ன? □

## இலங்கைப் பெண்ணின் தீரத்தை

## பாராட்டிப் பணப் பரிசு

(கொழும்பு)

றியாத் குண்டுவெடிப்பின் போது தனது உயிரைப் பணயம் வைத்து, தனது எஜமானரின் இரண்டு குழந்தைகளையும் காப்பாற்றியுள்ளார் இலங்கைப் பெண்மணி ஒருவர்.

இலங்கையைச் சேர்ந்த சுனிலா திஸ்ஸநாயக்க (வயது-30) என்பவரே இவ்வாறு தனது எஜமானரின் குழந்தைகளைக் காப்பாற்றியுள்ளார்.

இவரது துணிகரச் செயலைப் பாராட்டி இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் ஒரு லட்சம் ரூபாப் பணப் பரிசை வழங்கவுள்ளது.

வேலைவாய்ப்பு மற்றும் தொழிலமைச்சர் மகிந்த சமரசிங்க இப் பெண்ணுக்குரிய பணப் பரிசை வழங்கவுள்ளார். (உ-8)

ௐ

## திசைரி தியானம்

## நல்லதோர் நேசம்

உலகப் பற்றுடைய மக்களின் சீர்கெட்டுள்ள செயல்களைத் தூய்மைப்படுத்துவதற்கு அறிவாளிகளுடன் ஒரு நொடி பழகுவதே போதும். அந்தக் காந்த ஒளிவட்டமும் ஆன்மீகத் துடிப்பும் அறிவில் முதிர்ந்தவர்களின் சக்தி மிக்க எண்ண அலைகளும் உலகியல் வாழ்க்கையில் ஊறியவர்களது மனதில் பெரிய மாற்றத்தைத் தருவனவாகும். நல்லவர் நட்பானது குறுகிய காலத்தில் அறியாமைகள் அனைத்தையும் எரித்துவிடும். அதனால் தான் ஸ்ரீசங்கரரும் மற்றப் பெரியாரும் தங்கள் நூல்களில் நல்லவர்களோடு நட்புக் கொள்வது பற்றி மிக உயர்வாக எழுதியுள்ளார்கள்.

**சுவாமி சிவானந்தர்**

## மாணவர்களுக்கு விளையாட்டு பெரும் இடையூறானதல்ல

### அருண்மாஸ்ரர் தெரிவிப்பு

(கிளிநொச்சி)

விளையாட்டுத்துறை மாணவர்களுக்கு ஒருபோதும் இடையூறாக அமையமாட்டாது என தமிழீழ விடுதலைப்புலிகளின் கல்விக் கழகத்தின் துணைப் பொறுப்பாளர் அருண்மாஸ்ரர் தெரிவித்துள்ளார்.

வன்னியில் இடம்பெற்ற விளையாட்டு மேம்பாட்டுக்கான கலந்துரையாடல் ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்,

விளையாட்டுத்துறை மாணவர்களின் கல்விக்கு இடையூறாக அமையமாட்டாது. அது கல்வி வளர்ச்சிக்கு உதவும் காரணியாகவே உள்ளது.

தெல்லிப்பழை யூனியன் கல்லூரியைச் சேர்ந்த 3 மாணவிகள் க.பொ.த.உயர்தரப் பரீட்சையில் 3 பாடங்களிலும் "ஏ" தரச் சித்தி பெற்றுள்ள அதேவேளை அவர்கள் மூவரும் வலைபந்தாட்ட அணியில் இணைந்துகொண்டு சிறப்பாக விளையாடினார்கள் என பாராட்டினார் (தி-64,10)

## ஜே.வி.பி.-ஸ்ரீ.சு.கட்சி கூட்டு

# பொ.ஐ.முன்னணி கூட்டுக்கட்சிகள் ஆராய அவகாசம் கேட்கின்றன !

(கொழும்பு)

ஜே.வி.பிக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிக்கும் இடையே ஏற்படவுள்ள கூட்டணிபற்றிய சட்டவரைபை தாம் ஆராய்வதற்கு 30 நாள் அவகாசம் தேவையென பொ.ஐ.மு அங்கம் வகிக்கும் கூட்டுக்கட்சிகளான கம்யூனிஸ்ட் கட்சியும், லங்கா சமசமாஜக் கட்சியும் கேட்டிருக்கின்றன.

இச்சட்டவரைபு பொ.ஐ.முயின் அங்கத்துவ கட்சிகளுக்கு மட்டும் கடந்த வியாழனன்று ஜனாதிபதியால் அனுப்பிவைக்கப்பட்டிருந்தது. இக் கூட்டணி பற்றி கூடிய விரைவில் இறுதி முடிவொன்றை எடுக்கவேண்டி இருப்பதால், ஜனாதிபதி இக் கட்சிகளுக்கு தமது கருத்தைக்கூற டிசம்பர் 5ம் திகதி வரையுமே அவகாசம் வழங்கியிருந்தார்.

ஜே.வி.பியுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டபின் தேர்தல் ஒன்றை நடாத்த வேண்டுமென மங்கள சமரவீர தெரிவித்த கருத்து புத்திசாலித்தனமானதல்லவென ஜனாதிபதி தெரிவித்திருந்தார். ஜனாதிபதி திடீரென்று தேர்தல் ஒன்றை நடாத்துவதில்லை என்ற முடிவில் இருக்கிறார். காரணம் அவர் அபிப்பிராய வாக்கெடுப்புக்கள் சிலவற்றை நடாத்தி மக்களின் அபிப்பிராயங்களைத் திரட்டியுள்ளார்.

ஜனாதிபதியின் தற்போதைய ஆலோசகரான முன்னாள் சமூர்த்தி அமைச்சின் செயலாளர் சிறில் குணபாலவின் தலைமையிலேயே கருத்துக் கணிப்புக்கள் நடைபெற்றிருந்தன. இதன்படி ஒரு தேர்தலில் சுதந்திரக்கட்சிக்கு வெற்றிவாய்ப்பு கிடைக்கமுடியாது. ஜே.வி.பியுடன் கூட்டணி சேர்ந்தாலும்கூட வெற்றிவாய்ப்புகள் அரிதாகவே இருக்குமென கருத்துக் கணிப்புக்கள் தெரிவித்தன. (இ-6)

# எமது இயற்கை வளங்களை பாதுகாக்கத் தவறிவிட்டோம்

## யாழ்.பல்கலைக் கழகத்தில் ஜோய் மகேஸ்வரன் உரை

(யாழ்ப்பாணம்)

வடக்குக் கிழக்கு மாகாணத்தில் சுற்றுச் சூழல் முகாமைத்துவத்தினை நடைமுறைப்படுத்துவதில் பல்வேறு சவால்களும், நெருக்கடிகளும் எதிர்நோக்கப்படுகின்ற போதிலும் கூட எமது சமுதாயத்தின் அடுத்த சந்ததியினருக்காக நாம் இயற்கை மூல்வளங்களை முழுமையாகப் பயன்படுத்தி அவற்றின் உச்சப்பயன்பாட்டைப் பெறவேண்டும்.

இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகளின் பொருளாதார ஆலோசகரான கலாநிதி ஜோய் மகேஸ்வரன் நேற்றைய தினம் யாழ்ப்பாணம் கைலாசபதி கலையரங்கில் ஆரம்பித்து வைக்கப்பட்ட வடக்குக் கிழக்கு மாகாணத்தில் சுற்றுச் சூழல் முகாமைத்துவம் பற்றிய விடயத்தில் உரையாற்றும் போது தெரிவித்தார்.

யாழ்.பல்கலைக் கழகத்தின் உயர் பட்டப்படிப்புக்கள் பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் சி.க.சிற்றம்பலம் தலைமையில் நடைபெற்ற நான்கு நாள் சர்வதேச ஆய்வுப் பட்டறை யாழ்.பல்கலைக் கழகம், கிழக்கிலங்கைப் பல்கலைக்கழகம் மற்றும் பொருண்மிய மதியுரையகம் ஆகியவற்றின் அனுசரணையுடன் நடாத்தப்பட்டது.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றும் போது,

நாம் மனித வள மூலதனம், நிதி வள மூலதனம் மற்றும் பொருள் வள மூலதனம் பற்றியே சிந்திக்கின்றோம். ஆனால் எமது இயற்கை வள மூலதனம் பற்றி நாம் சிந்திப்பதே இல்லை.

வடக்குக் கிழக்கு மாகாணத்தில் இயற்கைவளங்கள் ஏராளம் இருக்கின்றன. நாம் இவற்றினைக் கண்டறிந்து பயன்படுத்தத் தவறிவந்துள்ளோம்.இந் நிலையில் எமது எதிர்கால சந்ததியினருக்காக நாம் எமது இயற்கை வளங்களைப் பயன்படுத்த வேண்டியவராக உள்ளோம்.

கடந்த 20 வருடகாலமாக வடக்குக் கிழக்கு மாகாணத்தில் இடம்பெற்று வந்த யுத்தம் பல இயற்கை வளங்களை அழித்துள்ளன. ஆயினும் நாம் இனி வரும் காலங்களில் எமது இயற்கை வளங்களை எதிர்கால நலனுக்காகப் பாதுகாக்க வேண்டும். நாம் எமது இயற்கை வள மூலதனங்களை எவ்விதம் முகாமை செய்யப் போகிறோம் என்பது பற்றி இந்த நான்கு நாட்களில் விரிவாக ஆராய்ந்து திட்டம் தீட்டவேண்டும்.

யுத்த அனர்த்தங்கள் காரணமாக வடக்குக் கிழக்கு மாகாணத்தில் விவசாயம், மீன்பிடி போன்றவை வெகுவாகப் பாதிக்கப்பட்டுவிட்டன. வடக்குக் கிழக்கு மாகாணத்தில்இடம் பெற்ற யுத்தம் காரணமாக 3 இலட்சத்து 26 ஆயிரத்து 700 வீடுகள் அழிக்கப்பட்டு விட்டன. சுகாதாரசேவைகள் 25 சதவீதமும் வீதிகள் 15 சதவீதமும் 500 பாடசாலைகளில் உள்ள 15000 வகுப்பறைகளும் சேதமாக்கப்பட்ட நிலையில் இருக்கின்றன.

வடக்குக கிழக்கு மாகாணத்தில நீடித்து நிலைத்து நிற்கக் கூடிய அபிவிருத்தித் திட்டங்களை உருவாக்குவதற்கும் வடக்குக் கிழக்கு வாழ் மக்களின் வாழ்வியலுக்குத் தேவையான அடிப்படை ஆதர வசதிகளையும் எவ்விதம் மேற்கொள்ளப் போகிறோம் எனத் திட்டமிட இவ்வாய்வுப் பட்டறை வழி வகுக்கும்எனக் குறிப்பிட்டார். (இ-16)

### திருமறைக்கலா மன்றத்தின் 38-வது ஆண்டு விழா

(யாழ்ப்பாணம்)

திருமறைக் கலாமன்றம் ஆரம்பிக்கபபட்டு 38 ஆண்டுகள் நிறைவை முன்னிட்டு நடாத்தப்படும் திருமறைக் கலாமன்றத்தினம் நாளை புதன் கிழமை மாலை 4.30 மணிக்கு யாழ்.மறைக்கல்வி நடுநிலைய மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ந-5)

# பேச்சுக்களை முன்னெடுத்து செல்லவேண்டுமாயின் அனைத்து இனமக்களும் ஒன்றுபடவேண்டும்

## ஜனாதிபதி உரை

(கொழும்பு)

நாட்டில் சமாதானத்தையும் சுபீட்சத்தையும் மீண்டும் ஏற்படுத்துவதற்கு அரசியல் கட்சிகளின் தலைவர்கள், மதத்தலைவர்கள் உட்பட அனைத்து இனமக்களும் ஒன்றுபட வேண்டும். இவ்வாறு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அனுராதபுரத்தில் உள்ள புனித வெள்ளரசுமரச் சுற்றாடலில் நடைபெற்ற சமய நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்டு பேசுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

நாட்டின் இரு பிரதான அரசியல் கட்சிகளும் இணைந்து செயற்படுவதற்கான பேச்சுவார்த்தைகள் தற்போது நடைபெற்றுவரும் காலகட்டத்திலேயே இந்த வேண்டுகோளை விடுத்துள்ளேன்.

நாட்டில் சமாதானத்தையும் சுபீட்சத்தையும் ஏற்படுத்துவதே இரண்டு முக்கிய கட்சிகளினதும் நோக்கமாகும்.எனவே இதனை அடைவதற்கு இரு பிரதான கட்சிகளும் இணைந்து பணியாற்ற வேண்டும். இதற்கு மக்கள் அழுத்தத்தைக கொடுக்க வேண்டுமென ஜனாதிபதி கேட்டுக் கொண்டார். (தி-60.10)

# கிண்ணியாவில் கிரனேட் வீச்சு கலவரம் வெடிக்கும் அபாயம்

(திருகோணமலை)

திருகோணமலையில் பதற்றம் தொடர்ந்த வண்ணமேயுள்ளது. இதனையடுத்து அப்பகுதியில் தமிழ் முஸ்லிம் சமூகங்களுக்கிடையே மோதல் வெடிக்கும் அபாய நிலை உருவாகியுள்ளது.

திருமலை கிண்ணியாவில் நேற்று முன்தினம் இரவு வீடொன்றின் மீது வீசப்பட்ட கைக்குண்டு வெடித்ததில், வீட்டில் நித்திரையில் இருந்த முகமது (வயது 55) என்பவர் உயிரிழந்துள்ளார். மேலும் இருவர் காயமடைநத நிலையில் கிண்ணியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இதேவேளை நேற்றுக்காலை திருகோணமலையில் பொலிஸார் மேற்கொண்ட சோதனை நடவடிக்கையின் போது ஓட்டோ ஒன்றில் வைத்து இரு கைக்குண்டுகளை கைப்பற்றியுள்ளனர். இச் சம்பவத்தோடு தொடர்புடைய மூன்று முஸ்லிம் இளைஞர்களை பொலிசார் கைது செய்து தடுத்து வைத்துள்ளனர்.

நேற்று நண்பகல் 12 மணியளவில் இடம் பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் ஜலீல் ஹாசன் என்பவர் காயமடைந்த நிலையில் திருமலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (இ)

## இலங்கையில்....

கருதமாட்டாது என்றும் வெளியுறவு அமைச்சர் எம்மிடம் சுட்டிக் காட்டியுள்ளார்.வடக்குக் கிழக்கில் தற்போது கலவரங்கள் ஏற்பட்டு வருவதனால் முஸலிம் மக்களின் பாதுகாப்பு யோசமடைந்துள்ளது. இதற்கு உரிய நடவடிக்கைகளை இந்தியா எடுக்க வேண்டுமென நாம் கோரியுள்ளோம்.

இலங்கையின் இனப்பிரச்சினை தொடர்பாக இந்தியா நேரடியாகத் தலையிட வேண்டுமென்று கோராத போதும் இராஜ தந்திர ரீதியில் இந்தியா இலங்கைக்கு உதவி செய்ய வேண்டுமென அவரிடம் நான் கேட்டுள்ளேன்.

இந்தியா, இலங்கைப் பிரதமர்கள் அண்மையில் விடுத்த கூட்டறிக்கையில் தெரிவித்திருப்பது போல இலங்கை இனப்பிரச்சினைத் தீர்விற்கான இடைக்கால நிர்வாகம் குறித்த விடயம் இறுதித் தீர்வின் ஒரு அங்கமாக இருக்க வேண்டுமென்பதையே இந்தியா விரும்புகிறது.

இடைக்கால நிர்வாகம் குறித்த விடுதலைப புலிகளின் யோசனைகள் இலஙகையின் இறைமையைப் பாதிப்புக்குள்ளாக்கக் கூடாதென இந்திய வெளியுறவு அமைச்சர் ஜஸ்வந் சிங் ஹா என்னிடம் தெரிவித்துள்ளார்.

தெற்கில் காணப்படும் அரசியல் நெருக்கடி குறித்து இந்தியப் பிரதமர் வாஜ்பாய் இலங்கை ஜனாதிபதியுடனும், பிரதமருடனும் நேரடியாகக் கதைத்துள்ளார். ஜனாதிபதியும் பிரதமரும் இவ்விடயத்தில் இணக்கப்பாடு ஒன்றுக்கு வரவேண்டுமெனவும் இந்தியா விரும்புகிறது என்றும் அமைச்சர் ரவூப் ஹக்கீம் அப் பேட்டியில் மேலும் தெரிவித்துள்ளார். (ம-5)

## கிண்ணியா சம்பவங்களுக்கும்...

ஹேரத் தலைமை தாங்கினார்.

திருகோணமலை நகரப் பகுதியிலுள்ள 14 சமாதானக் குழுக்களைச் சேர்ந்த 153 பிரதிநிதிகள் இக் கூட்டத்தில் கலந்து கொண்டனர். நேற்றுக் காலை நடைபெற்ற இக் கூட்டத்திற்கு விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள் கலந்து கொள்ளாமையைச் சுட்டிக்காட்டிய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் உபாலி ஹேரத இத்தகைய கூட்டங்களுக்கு புலிகளின் பிரதிநிதிகளின் சமுகம் அவசியம் எனக் கூறினார். இதனையடுத்து திருகோணமலை யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் அலுவலகத்தில் இடம் பெற்ற இரண்டாவது கூட்டத்தில் இராணுவத்தினரும் விடுதலைப் புலிகளின் திருகோணமலை பொருண்மியப் பொறுப்பாளர் தர்மனும், கும்புறுபிட்டி அரசியல் துறைப் பொறுப்பாளர் சிவக்குமாரும் கலந்து கொண்டனர்.

கூட்டத்திற்குத் தலைமை தாங்கிய யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் பிரதித்தலைவர் கருத்துத் தெரிவிக்கையில், கடந்த 22 மாதங்களாக இடம் பெற்ற சம்பவங்கள் கடந்த 14 நாட்களுக்குள் நடைபெற்றதாகத் தெரிவித்தார்.

இதேவேளை விடுதலைப் புலிகளின் பொருண்மியப் பொறுப்பாளர் தர்மன் கருத்துத் தெரிவிக்கையில் கிண்ணியாவில் இடம் பெற்ற சம்பவங்களுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் சம்பந்தம் இல்லை எனத் தெரிவித்துள்ளார். (ம)

## தன்னாட்சி அதிகார சபையை...

கதிர்காமரால் வெளியிடப்பட்டது மான 13 பக்க உத்தியோக பூர்வ தீர்மானத்தின்படி செயற்படுவதே நல்லதென நான் நம்புகிறேன்.

இது ஜனாதிபதி அரசியல் ரீதியாக மாற்றங்களுக்கு இடமளிக்கும் காலம். அவர் மேற்கொள்ளவுள்ள கூட்டணி மூலம் ஜனாதிபதி தனது அரசியல் எதிர்காலத்தைத் தீர்மானிக்க வேண்டும். நிபந்தனையுடனான சமாதானப் பேச்சுக்கள் நடாத்தப்படுவதை ஜே.வி.பி. நிராகரிக்க விரும்பவில்லை. ஆனால் பேச்சுக்களுக்கு அடிப்படையாகவேனும் கூட இடைக்காலத் தன்னாட்சிக் கோரிக்கையை ஏற்றுக் கொள்ள மாட்டோம். பிரிவினையைத் தூண்டும் பேச்சுக்கள் எதுவும் இருக்க முடியாது. இன்னும் சிறிது காலத்துக்குள் எப்பாதையால் செல்ல வேண்டும் என்பதை சுதந்திரக் கட்சித் தலைமையகம் தீர்மானித்துக் கொள்ள வேண்டும்.

ஜனாதிபதி தன்னைத் தானே குழப்பிக் கொள்கிறார். ஒரே நேரத்தில் இரு முரண்பட்ட கருத்துக்களைக் கொண்ட கட்சிகளான ஜே.வி.பியுடனும், ஐக்கிய தேசிய முன்னணியுடனும் கூட்டணி ஒன்றை உருவாக்கப் பேச்சுக்களை நடத்துகிறார். எம்முடன் கூட்டணி ஒன்று அமையுமாயின் இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபைக் கோரிக்கைகளைப் பேச்சுக்களுக்கு அடிப்படையாகக் கொள்வதற்கு அனுமதிக்க மாட்டோம் என்றும் விமல் வீரவன்ச மேலும் தெரிவித்தார்.(இ-6)

## ஐஸ்கிறீம்....

யில் கடமையை முடித்துவிட்டு துவிச்சக்கர வண்டியில் வீடு திரும்பிக் கொண்டிருக்கையில், நீர்வேலி பகுதியைச் சேர்ந்த ஐஸ்கிறீம் வானொன்று மோதியதில் சம்பவ இடத்திலேயே அவர் பலியானார்.

இதேவேளை பிரஸ்தாப நபர் மீது மோதிய ஐஸ்கிறீம் வானின் சாரதி சம்பவ இடத்தில் தரிக்காமல் வானுடன் தப்பிச் சென்றுவிட்டார்.

சம்பவ இடத்திற்கு வந்த கோப்பாய் பொலிஸார் சடலத்தை யாழ். போதனா வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்றுள்ளனர்.

மரண விசாரணையின் பின்னர் இன்று சடலம் உறவினர்களிடம் கையளிக்கப்படும். (இ-239)

நத்தார், புதுவருட மலிவு விற்பனை
X'Mas & New Year Sale
வாடிக்கையாளர்களின் நன்மை கருதி மார்கழி 1ஆம் திகதியிலிருந்து மார்கழி 31ஆம் திகதி வரை சகல பொருட்களுக்கும் விசேட கழிவுடன் மலிவு விலையில் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய ஒரே இடம்
லைடன் புடவை நிலையம்
410,ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (பஸ்நிலையம் எதிர்)
சகல பொருட்களுக்கும் விசேட கழிவுண்டு
T.P:2222381 [C/6957]

வரலாற்று ஆவணங்கள்
கலாநிதி க.குணராசாவின்
- ஈழத்தவர் வரலாறு
- யாழ்ப்பாண அரச பரம்பரை
- மகாவம்சம் தரும் இலங்கை வரலாறு
- 24 நான்கு மணிநேரம்
- மீண்டும் யாழ்ப்பாணம் எரிகிறது
- கோட்டை வரலாறு
- Jaffna Dynasty
ஆ.முத்துத்தம்பிப்பிள்ளையின்
- யாழ்ப்பாணச் சரித்திரம்
மயில்வாகனப் புலவரின்
- யாழ்ப்பாண வைபவமாலை
- ஜோனின் யாழ்ப்பாணச் சரித்திரம்
விற்பனையாளர்:
ஸ்ரீலங்கா புத்தகசாலை
காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்

வானொலி நாடகம் எழுதுவது எப்படி?
என்று விளக்கிக் கூறும்
முதலாவது தமிழ் நூல்
3 நாடகங்களுடன் இலக்கியம் பற்றிய பல விடயங்களைச் சொல்வது 365 நாடகங்கள் இயற்றிய அராலியூர் சுந்தரம்பிள்ளை எழுதியது

இப்பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 02.11.2003 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.